உ

குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 5 } 1906ஹு மேமீ { புத்தகம் 5

கிராமத்தின் சீர்திருத்தங்கள் III.

கிராமவாசிகள் கவனிக்கவேண்டிய பல சீர்திருத்தங்களைப்பற்றி முன் சஞ்சிகையிற் பேசினோம். இன்னும் பல சீர்திருத்தங்களுண்டு. அவைகளைக் கிராமத்தார் தக்கவண்ணம் கவனித்து நடத்தினாலொழிய கிராம க்ஷேமம் ஏற்பட இடமில்லை. கிராமத்திலுள்ள சகலரும் அச்சீர்திருத்தங்களைக் கவனிப்பதென்றால் இயலாது. ஆகையால் கிராமத்தார் தங்களுக்குள் ஒரு பஞ்சாயத்தாரை நியமித்துக்கொள்ளுதல் நலம், பத்துரூபாவுக்கு மேல் கிஸ்தி செலுத்தும் பட்டாதார்களையும் வருஷம் இருநூறு ரூபாவுக்கு மேற்பட்டவரும்படி உள்ளவர்களையும் மெம்பர்களாக ஏற்படுத்தி அவர்களினின்னும் ஐந்து பேர்களைப் பஞ்சாயத்தாராகச் சீட்டுமூலமாகத் தெரிந்தெடுத்து அவர்களைக்கொண்டு கிராமசம்பந்தமான சகல விஷயங்களையும் நடத்தல் நலம். அல்லது மூன்று வருஷங்கள் வரை வேலைபார்த்தல் நலம். அவர்களில் ஒருவர் கிராமக்கல்வியபிவிருத்தியைப் பற்றியும் சுகாதார விஷயங்களைப்பற்றியும் மற்றொருவர் தேவஸ்தானம், நந்தனவனம், சத்திரம், மடம் முதலிய கிராமப்பொது தர்மங்களைப்பற்றியும் இருவர் கிருஷித்தொழிலுக்கடுத்த வாய்க்கால் வெட்டு முதலிய விஷயங்களைப்பற்றியும், ஐந்தாவர் கிராமப்பணவரவு செலவைப்பற்றிக் கவனிப்பதுடன் கிராம வழக்குக்களைத்தீர்ப்பதைப்பற்றியும் கவனம் செலுத்தல்வேண்டும். இப்பஞ்சாயத்தார் தெரிந்தெடுக்கப்பட்டவுடன் மகாஜனசபை முன்பாகவும் தெய்வத்தின் முன்பாகவும் கிராமக்ஷேமத்தைக் கவனித்து வேலைபார்ப்பதாகவும் கிராம க்ஷேம விரோதமா

ன விஷயங்கள் யாதொன்றும் செய்வதில்லையென்றும் பிரமாணம் செய்விக்கப்படவேண்டும். வருஷவரவு செலவுகளை முன்னரே பொதுக்கூட்டத்தில் நிர்ணயப்படுத்திக்கொண்டு அதன்படி அவ்வவ்வேலைகளைச்செய்து வரல்வேண்டும். இப்பஞ்சாயத்தாருள் ஏதேனும் அபிப்பிராய பேதம் வந்தால் கிராமப்பொதுக்கூட்டத்தில் தீர்மானம் பண்ணிக்கொள்ளலாம். கிராமத்தாருக்குள் வித்தியாசமிருந்தால் அடுத்த கிராமப்பஞ்சாயத்தாரின் உதவியைக்கொண்டு தீர்த்துக்கொள்ளலாம். எப்பாடுபட்டாயினும் கிராமப்பொதுக்ஷேமத்தைப்பற்றிக்கவனிப்பது கிராமத்தாரின் முக்கியகடமை.

முதலில் அக்கிராமக்கல்வியபி விருத்தியைப்பற்றிப்பேசுவோம். கிராமத்தாருடைய விசாரணையிலேயே ஒருபள்ளிக்கூடமிருத்தல் இன்றியமையாதது. இதனால் கிராமத்தாருக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. தற்காலம் கவரன்மெண்டார் கிராமக்கல்வி யபிவிருத்தியைப்பற்றி மிக்க சிரமம் எடுத்துக்கொண்டு அதனைப்பரவச்செய்ய ஏற்பாடுபண்ணிவருகிறார்கள். கிராம பாடசாலைகளுக்கு வசதியான கட்டிடங்களும் கட்டிக்கொடுக்கிறார்கள். ஆகையால் அவ்வுதவிகளைப்பெற்றுக் கிராமப்பொதுவினின்றும் சொற்பம்செலவிட்டுக்கிராமத்துக்கு இன்றியமையாத கிருஷித்தொழில், சுகாதாரங்கள் முதலியவைகளை நன்குகற்பிக்கவேண்டும். கணக்கு விஷயங்களில் பழையபள்ளிக்கூடவழக்கங்களில் நன்மையான விஷயங்களை யெல்லாம் அனுசரிப்பதுடன் புதுமாதிரிகளையும் கிராமங்களுக்குத் தக்கவண்ணம் தழுவி நடத்தல் நலம். கல்விபயிற்றுங்கால் மதவிஷயமான கிரந்தங்களையும் விஷயங்களையும் மறத்தல் ஒண்ணாது. ஜீவகாருண்யம், சத்தியம், அன்பு சாந்தம், சுசி, செய்ந்நன்றியறிதல் முதலிய நற்குணங்களைப் புகட்டிப் பாலர்களை நல்லொழுக்கமுடையவர்களாகச் செய்தல்வேண்டும். எவ்வித சாமார்த்தியமிருப்பினும் பிள்ளைகளுக்கு மேற்கூறிய நற்குணங்கள் இல்லாவிடில் அது சிறிதும் பயன்படாது. மற்றயாவரும் கேள்வி மூலமாக அறிவையடையும்படி இதிகாசபுராணங்கள் வாசிக்க ஏற்பாடு செய்தல்வேண்டும். இவ்வேற்பாட்டால் மட்டுமே ஸ்திரீகளும் தொழிலாளிகளும் தக்கமனோவிசாலத்தை அடைவார்கள். கிராமத்தார் இவ்விஷயத்தில் எத்துணை பணஞ்செலவிட்டாலும் பயனுள்ளதாக முடியும்.

அடுத்த முக்கியமானது சுகாதாரமான விஷயத்தைக் கவனித்தல். தெருக்களைக் குப்பைசெத்தை இல்லாமலும் மேடுபள்ளமில்லாமலும் சுசிருசியாய் வைத்துக்கொள்ளல் நலம். இருட்டுக்காலங்களில் தெருக்களில் வெளிச்சம் போடல் இன்றியமையாதது. குளம் குட்டை முதலிய வற்றையும் குடிதண்ணீர்க்கிணறுகளையும் கட்டுங்காவலுமாக வைத்துப்பாதுகாத்தல்வேண்டும். கிராமப்பொதுச்செலவிலேயே சில முக்கிய மருந்துகளை வாங்கித்தர்மத்துக்குக் கொடுப்பதன்றி ஒரு தக்க வைத்தியரையும் ஏற்படுத்திக்கொள்ளல்வேண்டும். மானிட தேகம் பிணிக்குட்பட்டதாகையால் வைத்தியனை வைத்தாதரிப்பது இன்றியமையாதது. கோமாரி, காணை முதலிய மாட்டு வியாதிகள் கிராமங்களுக்குள் புகுந்து பட்டிபட்டியாய் மாட்டை மடிப்பது வழக்கம். ஆகையால் அக்கொடிய நோய்களினின்றும் கன்றுகாலிகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடுசெய்தல் வேண்டும். கிராமத்தைச்சுற்றி மந்தைகளும் தோப்புக்களும் இருப்பது மிகவும் முக்கியமானது. அவைகளில்லாவிடில் ஜனங்களுக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் மிக்க அசௌகரியமுண்டாகும். வழிநடைப்பாதைகளை அசுத்தப்படுத்தாமலிருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்தல்வேண்டும். வண்டிகள் போக்குவரத்துக்கு யோக்கியமாகப் பாதைகளைச் சமன்செய்து வைத்துக்கொள்ளல்வேண்டும். இவ்விஷயங்களில் கிராமத்தார் அசிரத்தையாயிருப்பதால் குடிகளுக்கு மிகவும் அசௌகரியம் ஏற்படுகின்றது. ஆகையால் இவ்விஷயங்களில் கண்ணுங்கருத்துமாயிருத்தல் நலம்.

அடுத்த முக்கியமானது கிருஷிசம்பந்தமான விஷயங்கள். இவ்விஷயம் பெரிதானபடியால் இதனை மேல்விசாரணைபண்ண இருவர் அவசியம். ஒருவர் வாய்க்கால் வெட்டு, தண்ணீர்ப்பாய்ச்சல் முதலிய விஷயங்களிலும் மற்றொருவர் கிருஷிகளுக்கு வேண்டிய எருக்களையும் மற்றுமுள்ள விவசாயக்கருவிகளையும் சேகரித்துக்கொடுப்பதிலும் கண்ணுங்கருத்துமாயிருத்தல்வேண்டும். ஊர்ப்பொதுவிலிருந்து விவசாயத்துக்கு வேண்டிய கலப்பை, நுகம், பரம்புச்சட்டம், பூட்டான்கயிறு, மண்வெட்டி, அரிவாள், களைக்கோட்டு, ஏற்றுச்சால், இறைகூடை, ஏற்றுமரம், ஆடுகால் முதலிய கருவிகளைச் சேகரித்துவைத்துக் கிராமத்தாருக்குச் சகாயமான விலைக்குக் கொடுத்தல்வேண்டும். வா

ய்க்கால் வெட்டு வரி முதலியவைகளை வசூலிப்பதும் இவரதுகடமையே யாகும். வரிகளை மாசூல்காலத்திலேயே தானியமாக் வசூலித்துக்களஞ்சியங்களில் சேர்த்துக்கிராமப் பஞ்சாயத்தார் அனுமதியின்மேல் அவைகளைச் செலவுசெய்தல்வேண்டும். திருட்டுத்தனம் நடவாதபடி தக்க பந்தோபஸ்தில் வைத்துப்பூட்டி வேண்டும்போது பஞ்சாயத்தார்முன்னிலையில் திறந்து செலவுசெய்தல் வேண்டும். வாய்க்கால் வெட்டு குளவெட்டுத் தொழிலைத்தக்ககாலத்தில் செய்து ஜலவரத்துக்குத் தயாராயிருத்தல்வேண்டும். தண்ணீர் முறைகளைத் தர்மங்களை அநுசரித்து ஓரஞ்செய்யாமல் நடத்தல்வேண்டும். குளங்களில் தக்ககாலங்களில் ஜலத்தை நிறைவாகக்கட்டல்வேண்டும். ஜலக்குறைவானகாலங்களில் மேலதிகாரிகளுக்குக் கிராமத்தார் மனு செய்துகொள்வதும் தவிர நேரிலும் சென்று முறையிட்டுப் பரிகாரம் தேடிக்கொள்ளல்வேண்டும். இது விஷயத்தில் கிராமத்தார் ஒற்றுமையாக இருக்கும் பக்ஷத்தில் அதிகாரிகள் உதவிசெய்யாமலிரார்கள். அதிகாரிகளுக்குத் தக்கவண்ணம் தாழ்மையுடனும் மரியாதையுடனும் நடந்துகொண்டால் அவர்கள் தயைசெய்யாமலிருப்பது அபூர்வம். கிராமத்தாரிடம் பிடுங்கித்தின்கிற சில பெருச்சாளிகளுண்டு என்றாலும் அவர்களும் கிராமத்தாரது ஒற்றுமையைக்கண்டு நடுநடுங்குவார்கள். கிராமத்தார்மட்டும் ஒழுங்குகாகவும் உண்மையாகவும் தங்கள்காரியங்களில் கண்ணுயிருந்து அவைகளைச் சரிவரச்செய்துவந்தால் அதிகாரிகள் ஒழுங்காயிராமல்தீராது.

அடுத்தபடி முக்கியம் தேவஸ்தானம், சத்திரம், நந்தனவனம், மடம் முதலிய கிராமப்பொது தர்மங்களைப்பற்றிக் கவனித்தலாம். தேவஸ்தானங்கள் நல்ல நிலைமையிலிருந்தால் மட்டுமே கிராமத்துக்கு க்ஷேமமுண்டு. நந்தனவனங்களைச் சரிவரப்பரிபாலித்தல் மிகவும் புண்ணியமாகும். ஒரு ஊரின்கண்ணுள்ள நந்தனவனம் பாழாக இருக்குமானால் அக்கிராமத்தின் க்ஷேமக்குறைவை நிச்சயிக்கலாம். சத்திரம் மட முதலியவை அவ்வாறே. அவைகள் எந்த உத்தேசத்துடன் ஏற்பட்டனவோ அவ்விதஉத்தேசப்படி நடத்தக்கிராமத்தார் பிரயாசைப்படல்வேண்டும். கிராமப்பொதுச் சாவடி ஒன்றிருத்தலும் நலம். அவைகளைப் பரிபாலிப்பவர் தர்மசீலராயிருத்தல்வேண்டும். கிராமங்களில் இத்தர்மங்கள் சரிவரநடவாத பக்ஷத்தில் வேறு எவ்வி

டங்களில் நடைபெறும். ஆகையால் இத்தர்மங்களைப் பரிபாலனம் பண்ணுவதில் கிராமத்தார் கண்ணுங்கருத்துமாயிருத்தல் வேண்டும்.

அடுத்தபடி முக்கியம் கிராமப்பொக்கிஷ பரிபாலனம். இதனைச் சரிவர அபிவிருத்தி பண்ணிக் குடிகளுக்குக் கிருஷிக்கு வேண்டிய உதவிகளையும் செய்து கிராம க்ஷேமத்தைக் காப்பாற்றவேண்டும். விவசாயச் செலவுக்கு வேண்டிய தொகையைச் சொற்ப வட்டிக்குக் கொடுத்துக் குடித்தனக்காரர்களை கடன்காரர்களுடைய வாயினின்றும் ரக்ஷித்தல் வேண்டும். கிராமத்தார் சிலசமயம் பணத்தைப் புதைத்தும் வைக்கிறார்கள். சும்மா கிடக்கிற பணத்தை அவ்வூருக்கு வேண்டிய கைத்தொழில் அபிவிருத்தியில் செலவிட்டால் ஜனங்களுக்கும் நன்மையுண்டு. கிராமத்திலுள்ள புத்திமான்களைத் தெரிந்தெடுத்து அவர்களது கல்வி யபிவிருத்திக்கு உதவி செய்தல் வேண்டும். சாகுபடி விஷயங்களில் அயல் நாட்டார் செய்திருக்கிற சீர்திருத்தங்களையும் கிராமப் பொதுவில் செய்து பார்த்துக் கிராம க்ஷேமத்துக்கு அநுகூலமாயிருக்கும் பக்ஷத்தில் அவைகளைக்கைக் கொள்ளல்வேண்டும்.

இவ்வித ஏற்பாடுகளுடன் கிராமப் பொதுவிலிருந்து தர்மங்களையும் தங்கள் சக்திக்குத் தக்கவண்ணம் கிராமத்தார் நடத்தவேண்டியது. கோஆபரேட்டிவ் ஸொஸைடிகள் ஏற்படுத்தி வீடுகட்டும் விஷயத்திலும் நிலவிருத்தி பண்ணும் விஷயத்திலும் கைத்தொழில் அபிவிருத்தி பண்ணும் விஷயத்திலும் கண்ணுங் கருத்துமாயிருந்து கிராமப் பொது க்ஷேமத்தை நாடிவந்தால் "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" என்றவண்ணம் தேசமெல்லாம் செழிப்புற்றிருக்கும். செல்வம் தழைத்தோங்கும். வறுமை சிறிது மிராது. கிராம க்ஷேமத்தாலேயே நாட்டின் க்ஷேமம் ஏற்படவேண்டும். கிராமத்தார் பொதுவில் ஒரு பத்திரிகை வாங்கிப் படித்து அடிக்கடி தேச வளப்பங்களையும் அறியவேண்டும். தங்களுக்குத்தகாத பெரிய காரியங்களில் பிரவேசித்தல் ஒண்ணாது. அவ்வாறு தலையிடும் பக்ஷத்தில் உள்ள காரியமும் போய்விடும். இவையெல்லாம் சரிவர நடக்க வேண்டுமானால் ஒற்றுமையும், சத்தியமும், அன்பும், பரோபகார சிந்தையும் கிராமத்துக்குள் இருத்தல் வேண்டும்.

"ஒத்தால் வாழலாம் எத்தால் வாழலாம்," "ஒற்றுமையால் உலகத்தை ஜயிக்கலாம்." "ஒற்றுமையில்லாக்குடி ஒருமிக்கக்கெடும்" என்ற பழமொழிகளைக் கிராமத்தார் நன்கு கவனித்து நடந்தால் எல்லோருக்கும் சௌக்கியம் உண்டாகும் என்பது திண்ணம். இவை களெல்லாம் முற்காலத்தில் நன்கு கவனிக்கப்பட்டன. வர வர க்ஷீண மடைவதால் கிராமங்களும் தினேதினே க்ஷீணதசைஅடைந்து வருகின்றது. ஆகையால் இவைகளை நன்கு கவனித்துக்கிராம க்ஷேமத்துக்கு வேண்டியவைகளைக் கிராமத்தார் நாடி இன்புற்று வாழ்வார்களாக.

பத்திராதிபர்.

THE SALE OF BRIDEGROOMS.

மாப்பிள்ளைகளின் விக்கிரயம்.

காலமோ கலிகாலம். நூதன வழக்கங்கள் நூதனமாய் பிரபலமாகின்றன. நல்ல வழக்கங்கள் நம்மவர்களுக்கு எளிதில் பிடிபடுகிறதில்லை. கொடிய வழக்கங்களை எத்துணை தேசாபிமானிகள் கட்டோடொழிக்க கஷ்டப்பட்டு வந்தும், அவைகள் ஒழிவதாய்க்காணோம். இவைகளின் தீமைகள் பன்னிப்பன்னி இடைவிடாது பறைசாற்றப் படுகின்றன. இவைகளைச்சிலர் செவியுட்கொள்ளுகிறதில்லை. வேறு சிலரோ செவியுட்கொண்டும் தம் புராதன வழக்கத்தின்படியே நடக்கிறார்கள். ஆசாரசீர்திருத்த சபையார் பலவருஷங்களாகப் பாலிய விவாகத்தைப்பற்றி ஓய்வொழிவில்லாமல் பிரசங்கித்தும் பத்திரிகைகளில் எழுதியும் கதறி வந்தார்கள். பெண்களுக்குச் சிறுவயதில் கல்யாணம் செய்வதே நாட்டில் கைம்பெண்கள்தொகை அதிகப்பட்டிருப்பதற்குக் காரணம். இத்தீமை பெண்களின் கல்யாண வயது உயர்த்தப்படுவதால் நீக்கப்படலாமென்று புகல்கிறார்கள். இதன் பயனாகப்பெண்களுக்கு 11, 12 வயதில் கல்யாணம் தற்காலம்நடந்துவருகிறது. இதுவும் சிறுபான்மையே எனலாம். பணக்காரராயுள்ளவர்

கள் தங்கள் பெண்களுக்குச் சிறு வயதிலேயே கல்யாணம் செய்து வைக்கக் கருத்துள்ளவராயிருக்கிறார்கள். இங்கிலீஷ் படிப்பு நாட்டில் பரவிய காலமுதல் நம் ஸ்திரீகளை, அவர்கள் பரமவேழையாகிலும் இங்கிலீஷ்எழுதப்படிக்கத்தெரிந்த மாப்பிள்ளைகள் வேண்டுமென்றதைத் தியப்பேய் பிடித்திருக்கிறது. "ஆஸ்தியும் வேண்டியதில்லை ஒன்றும் வேண்டியதில்லை. இங்கிலீஷ் வாசனை யிருந்தால் போதும். பெண் எப்பொழுதும் கஞ்சிக்கு திண்டாடவேண்டுவதில்லை" என்று நம் ஸ்திரீகள் சொல்வதைக்கேட்கிறோம். மாப்பிள்ளைக்கு இங்கிலீஷ் படித்த காரணத்தால் விலையேறி வருகிறது. நம்மவர்கள் பிள்ளைகளுக்குக் இக்கல்யாணத்தை பரீக்ஷை தேறுகிறவரை தள்ளிவைப்பது பாலிய விவாகத்தின் தீமையைப்பற்றிய உணர்ச்சி யுள்ளதாலன்று. மெட்ரிகுலேஷன் தேறிய ஒரு பிள்ளையின் பெற்றோர் எப். ஏ. பி. ஏ. பாஸ் பண்ணினால் விலை ஜாஸ்தி கிடைக்கும் என்ற தைரியத்தால் "எங்களுக்குக் கல்யாணத்துக்கு அவசரமில்லை. பிள்ளை சம்மதிக்கமாட்டேனென்கிறான். நாங்கள் என்ன செய்வது" என்று பாசாங்கு வார்த்தையைச் சொல்லுகிறார்கள். பெண்பிள்ளைகளில்லாமல் படித்து பாஸ் செய்த ஆண் பிள்ளைகளுடைய பெற்றோர் செய்யும் கிராக்கிகளுக்களவேயில்லை. "பி. எல். பரிக்ஷைக்கு (வரதக்ஷணையைத்தவிர) செலவு நீங்கள்தான் ஒத்துக்கொள்ளவேண்டும். கல்யாணச்சீர்கள் ஒன்றும் தப்பக்கூடாது. எங்களுக்கெல்லாம் ரயில்சார்ஜ், வண்டிசார்ஜ் நீங்கள் கொடுக்கவேண்டும்" என்று மாப்பிள்ளையின் தகப்பன் சொல்வது எவ்வளவு கொடூரம்! மாப்பிள்ளைகளுக்குப் பணம்கொடுக்கும் வழக்கம் எப்படி முதலில் ஏற்பட்டதென்பதைப்பற்றி இவ்விடத்தில் சொல்ல வேண்டியதவசியமே யாகிறது.

மேலேநம்ஸ்திரீகளின் இங்கிலீஷ்மாப்பிள்ளைப்பைத்தியத்தைப்பற்றிக்கூறினேம். ஐம்பதுவருஷத்துக்கு முன் ஜனங்களில் வெகுசிலரே இங்கிலீஷ்படித்தவர்கள். யுனிவர்ஸிடி பரீக்ஷை அக்காலத்தில் ஒன்றுமில்லையாதலால் எழுதப்படிக்கத் தெரிவதேபெரியகல்வியாயிருந்தது. அரைகுறையாய்ப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு அக்காலத்தில் விசேஷ மதிப்பிருந்தது. இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் கற்பிக்க ஏற்பாடானபிறகு இங்கிலீஷ் தெரிந்தவர்களுக்கு சர்க்காரில் நல்ல உத்தியோகம் கொடுக்கப்பட்டுவந்தது. அப்பாஷையைக் கற்றுக்கொள்ளப் பிள்

ளைகள் தூண்டப்பட்டனர். சர்க்கார் நல்ல புத்திசாலிப் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்துக் கற்பித்து வந்தார்கள். நாளாகநாளாக இது முடியாதகாரியமாய் விட்டது. இங்கிலீஷ் கற்க எல்லோரும் தொடங்கிவிட்டார்கள். சில ஏழைப்பிள்ளைகள் நல்ல புத்திசாலியுள்ளவர்களாயிருந்தபோதிலும் வறுமையினால் கல்வியை மேலும்மேலும் கற்க அசக்தராயிருந்தார்கள். இக்காலத்தில்தான் மாப்பிள்ளைக்குப் பணம் கொடுக்கும் வழக்கம் முளை கிளம்பியதென்னலாம். சக்தியுடையவர்கள் பிற்காலத்துப் பயனைக்கருதி நல்ல பிள்ளைகளுக்குத் தங்கள் பெண்களைக்கொடுத்துபடிப்புக்குதவிசெய்தார்கள். மாப்பிள்ளைக்குச் சாப்பாடு போட்டாகிலும் சம்பளத்தைக்கொடுத்தாகிலும் உதவிபண்ணுவது வழக்கத்தில் வந்தது. இதன் பிறகு மாமனார்கள் மாப்பிளைகளுக்கு உதவிசெய்ய முடியாமல் போய்விட்டது. எவ்வாறெனின் பலவித இல்லறத்தொந்திரவுகளால் மாப்பிள்ளைக்குச்செய்துவந்த உதவியைச் சாக்குப் போக்குச் சொல்லி நிறுத்தினார்கள். மாப்பிள்ளைகள் இப்படி வாக்குத்தத்த மாறுகிற மாமனார்களை நம்புவதற்கிடமில்லாமலிருக்கிறதால் ரொக்கமாக ஏதோ தொகை வாங்கிக்கொள்வது சரியென்று ஒரு புது வழி கற்பித்தாற் போலும். 7, 8 வருஷங்களுக்கு முன் மாமனார்கள் "எப்—ஏ க்குப் படிக்கவைக்க முடியுமானால் சரி" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இரண்டொரு வருஷமாக ரொக்க ஏற்பாடாய் விட்டது. படிப்புக்கும் பரீக்ஷைக்கும் தகுந்தவாறு விலை ஏற்பட்டுவிட்டது. மெட்ரிகுலேஷன் பரிக்ஷைக்காரன் ரூ 500 என்கிறான். எப். ஏ. காரன் 750என்கிறான் பி. ஏ. காரன் சரியாக சகஸ்ரம் என்கிறான். "இதற்குக் குறைவதாயிருந்தால் பேச்சேவேண்டாம் என்கிறான். பிள்ளையின் தகப்பன் வேதத்திலும் சாஸ்திரத்திலும் எவ்வளவோ தெய்வத்தன்மை யுள்ளதாகக்கூறப்பட்டுள்ள "விவாகம்" "விவகாரம்" ஆய்விட்டது. பரிதாபமே! மந்திரம் சடங்குகள் ஒன்றும் கவனிக்கப்படுவதரிதாயிருக்கின்றது. விவகாரமில்லாத விவாகம் ஆபூர்வமாயிருக்கின்றது. பணச்சண்டை சீர்ச்சண்டை கல்யாண சம்பரயமாய்விட்டது! என்ன அநீதம்! கேட்பவரில்லை. பணக்காரன்தான் கொடுக்கச் சக்தியிருக்கிறது கொடுக்கிறான். ஏழை எங்கே போவான்? 15ரூ சம்பளத்திலிருக்கும் ஒருவனுக்கு இரண்டு பெண்ணிருந்தால் 1000 கல்யாணம்செய்ய

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

வேண்டுமே! அவன் எங்கேனும் திருடுவான். கல்யாணம் செய்யாதிருந்தால் ஜாதிப்பிரஷ்டம் செய்து விடுகிறார்கள். வயிற்றுக்குச் சாப்பிடுவானா பெண்ணுக்குச் சேர்த்து வைப்பானா? அவன் பரிதாப நிலைமையை என்னென்றுரைப்பது? மனைவி நகையில்லை, புடவையில்லை என்கிறாள். மேலும் அவள் பெண்ணுக்கு நகைபண்ணிப் பூட்டவேண்டாமா? காது மூளியும் கைமூளியுமாயிருந்தாலெப்படி? யார் கல்யாணம் பண்ணிக்கொள்வார்கள்?" கேட்டதும் பரதவிக்கிறான் எளியோன். விசாரத்தால் உணவும் சரியாயுண்ணாமல் வியாதிக்கிரையாகிறான். "பட்டகாலிலே படும்" என்பதற்கேற்ப புத்திரபாக்கியம் புத்திரதௌர்பாக்கியமாய் முடிகிறது. புத்திரபாக்கியம் நம்மனோரால் மிக்க சந்தோஷத்துடன் கொண்டாடப்படுவது வழக்கம். தற்காலத்தில் ஆணாயிருந்தால் சந்தோஷப்படுகிறார்கள். பெண்ணாயிருந்தாலோ வாய்விட்டழுவதுதானில்லை. இறந்த வீடுபோல்தான் பெண் பிறந்த வீடு காணப்படுகிறது. ஆணும் பெண்ணும் பக்ஷபாதமில்லாத கடவுள் சிருஷ்டிப் பொருள்களாயிருந்தும் ஒன்று சந்தோஷத்துக்கிடமாயும் மற்றொன்று விசனத்துக்கிடமாயுமிருப்பதென்னோ? கலிகாலக்கொடுமை யன்றோ?

இந்நூதன வழக்கத்தால் விளையும் தீமைகள் பல. பெண்ணைப் பெற்ற தௌர்பாக்கியன் நேரான வழியிற் போனால் ஒன்றும் முடிகிறதில்லை. ஏதாவது தந்திரம் செய்யவேண்டும். பெண் கல்யாணமாகாமலிருப்பது ஊரார் பழிப்புக்கிடமாயிருக்கிறது. கல்யாணத்துக்குப் பணம் வேண்டும். அவன் உத்தியோகஸ்தனாயின் லஞ்சம் முதலியது போன்ற துர்வழக்கங்களைக் கைக்கொள்ள ஆரம்பிக்கிறான். வேறுவழியில்லை. நல்ல களங்கமற்ற மனமுடையவன்கூட காலவிசேஷத்தாலும் நிர்ப்பந்தத்தாலும் துர்வழக்கங்களை அனுசரிக்க வேண்டிவருகிறது. உதாரணமாய்ப் பார்க்கலாம். 8 ரூ சம்பளத்திலுள்ள ஒரு போலீஸ்காரன் கடவுள் கடுமையால் 5, 6 பெண்களுடையனாயின் அவன் யோக்கியனாயிருப்பதெப்படி? என்னென்ன வழிகள் பணம்சம்பாதிக்க உண்டோ அவைகளை எல்லாம் முயற்சிக்கிறான். இவ்வழக்கத்தால் மனிதனுடைய நன்னடக்கையே மாறுதலடைவது என்ன கஷ்டம் கல்யாணத்துக்குக் கடன் வாங்கியாவது செய்யத்துணிகிறான். "கடன் கொண்டும் செய்வன செய்" என்று கூறியிருக்கிறதே! எப்படியா

கிலும் நம் கடமையை நாமே செய்து தீரவேண்டு மென்றெண்ணிக் கடன் வாங்குகிறான். சொத்திருந்தால் அடகு வைத்துவாங்கலாம். இல்லாவிடில் ஜாமீன் போட்டு ஒன்றுக்குப்பத்தாய் வட்டிகொடுப்பதாக நாட்டுக்கோட்டைசெட்டியண்டை போகவேண்டியதுதான். இவன் தனக்குள் தானே தீர்மானித்துக் கொள்ளுகிறான். கொடுக்கும்போது பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது வாங்கிச். செலவழிக்கலாம். சிவில் ஜெயிலில் இருக்கநேரிட்டால் என்ன? சௌக்கியமாய்விட்டது. வியாதி ஏதாவதிருந்தால் அதைப்பார்க்க டாக்டரிருக்கிறார் என்று மனோதிடம் செய்துகொள்ளும்படியாகி விடுகிறது. இன்னும் தீமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். காலமும் இடமும் வேண்டாமா?

இக்கொடுமைகள் என்று நீங்குமோ அன்றே நமக்கும் க்ஷேமம் நம் நாட்டிற்கும் க்ஷேமம். கொடியவழக்கம் ஒழியப் பலமார்க்ங்களுள. அவைகளுள் ஒன்றிரண்டைக் கூறலாம்.

மேல்திசையிலிருப்பது போலப் பெண்களுக்குக் கல்யாணம் கட்டாயமில்லை யென்று ஏற்பட்டுவிட்டால், மாப்பிள்ளைகிராக்கி பறந்துவிடும். நம்முள் சில ஸ்திரீகளுக்கு கன்னி வாழ்வுகழிக்க விருப்பமிருந்தபோதிலும் அவ்வாறு நடக்க இயலுகிறதில்லை. தாய் தந்தையர்களுக்குப் புத்திவருவதற்கும் தானே யோசிக்கும் திறமை ஏற்படுவதற்கும் முன்பே கல்யாணம் முடித்துவிடுகிறார்கள்.

பிராமணர்களில் பல உட்பிரிவுகளிருக்கின்றன. பிரஹசரணத்தாரில் திருவண்ணாமலை, கொளத்தூர், மாங்குடி, என்று 40 பிரஹசரணங்களிருக்கின்றன. வடமாளில் பலவகுப்புக்களிருக்கிறார்கள். ஒரு வகுப்பார் தங்களுக்குள்ளேயே கொள்வனகொடுப்பன செய்து கொள்ளல் வேண்டும். சில வகுப்பில் மாப்பிள்ளைகள் பெண்கள் அதிகரிததிருக்கிறார்கள். ஆகையால் இவ்வுட்பிரிவுகளுக்குள் வித்தியாசமில்லாமல் பெரும்பிரிவுகளே இருக்கின் மாப்பிள்ளைகள் கிரயம் ஜாஸ்தியாகாது என்று சில மேதாவிகள் கருதுகின்றார்கள். இப்படிக் கல்யாணங்கள் நடப்பதில் யாதொருஇடையூறுமிருப்பதாகக் காணோம். தற்காலத்தில் பிராமணர் களுக்குள் புருஷர்கள் வித்தியாசம் பாராட்டுகிறதில்லை. தமிழ்பிராமணர்கள் ஐயங்கார் மாத்வர் வீடுகளில்கூட மனங்கூசாமல் போஜ

னம் செய்கிறார்கள். ஐயங்கார்களும் மாத்வர்களும் சமபந்திபோஜனத்துக்கு மன பிசையாத வர்களாயிருந்தார்களென்றாலும் தற்காலம் அவ்வளவு பிடிவாதகுண முள்ளவர்களாயில்லை. பிராமணர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுவது ஒழிந்து கொண்டே வருகிறதே. புருஷர்கள் மட்டுமே இப்படியிருக்கிறார்கள், ஸ்திரீகள் அப்படியில்லையென்று எண்ணக்கூடாது. சென்னை போன்ற பட்டணங்களிலுள்ள ஸ்திரீகள் இவ்விஷயத்தில் தங்கள் கணவர்களை விடச் சீர்திருந்தியிருக்கிறார்கள். சென்னையில் நடக்கும் பிராமண வீட்டுக் கல்யாணத்தில் போஜனத்துக்காக எல்லாப் பிரிவினரும் உட்காரவில்லையோ? இப்படியிருக்கையில் ஸ்திரீகளும் தம் துணைவருடன் மனமொத்து உட்பிரிவு வித்தியாசம் பாராட்டாமல் கல்யாணங்கள் நடத்தி வைப்பதில் என்ன ஆக்ஷேபணை? ஏதாவதிருந்தால் இன்னவையென்று பத்திரிகை வாசிக்கும் பெண்மணிகள் விரித்துரைப் பார்களாக. இத்தகைய சீர்திருத்தத்துக்கு ஜகத்குரு சிருங்கேரிஆசாரியசுவாமிகள் கூட தமக்கு ஒரு ஆக்ஷேபணையுமில்லையென்று கூறியுள்ளார்களாம். இச்சீர்திருத்தம் நிறைவேறுமலிருப்பதற்கு ஸ்திரீகளே காரணமென்றும் அவர்கள் மனமொத்திருப்பார்களாயின் மிக்க நலமாயிருக்குமென்றும் கூறுகிறார்கள்.

நாளுக்குநாள் புத்தி கோசரத்தில் புருஷர்களுக்குச் சரிசமான முள்ளவர்களென்று வெளிப்படுத்தி வரும் ஸ்திரீ இரத்தினங்களே! உங்கள் கணவர்கள் பெண்களை மணம் செய்விப்பதில் எத்துணை வருத்தத்தை அடைகிறார்களென்பது நீவிர் அறியாததோ? இல்லறமாகிய சங்கடத்தை நீங்களிருவிரும் இழுத்துச் செல்லக்கடமைப் பட்டுள்ளீரன்றோ? பாவம்! உமது கணவரை மிக்க வருத்தத்துக்கு உட்படுத்தி, வருத்தத்தை உணரார்போல வாளாவிருப்பது நீதமாகுமோ? துக்கத்திலும் சந்தோஷத்திலும் அவருடன் உடன்பட்டு உழலச்சபதம் செய்துள்ள வர்களல்லவோ நீவிர்! நீவிர் வருத்தத்தை அறியாதவர்களுமல்லவே. அறிந்தும் அறியாதார் போலிருப்பது சரியானதாகுமோ? உமது கடமை கணவர்களுக்குச் சமயத்துக் கேற்ற புத்தி புகட்டி அரசனுக் கமைச்சனைப் போலொருவதன்றோ? இராஜரீகம் அமைச்சன் அனுமதியும், இஷ்டமும், ஆர்வமும், ஊக்கமுமின்றி

அரசனால் நடக்கேதல்சாத்தியமோ? நீங்கள் இவ்விஷயத்தைப் பற்றி உங்களது அபிப்பிராயத்தை வெளியிடுவீர்களென்று நினைக்கிறேன். மேற்கூறிய விஷயங்கள் சரியென நம்பும் உங்களில் சிலர் லோகோபகாரமாக நீங்கள் இதர ஸ்திரீகளுடன் பேசும்போது தைரியமாய் அவர்கள் மனத்தில் இவை படும்படி புகலுவீர்கள் போலும். இது வே தேசம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறதாகும்.

எம். ராஜம் ஐயர்.

சிருஷ்டியின் அற்புதங்கள்.

தாது, மூலம் ஜீவன் என்று சிருஷ்டிப்பொருள் மூன்று வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் அளவிடக்கூடாத விசித்திரங்கள் உண்டு. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பிற் பெருகும். ஆயினும் மூலவர்க்கத்துக்கு இயற்கையாயுள்ள அதியற்புதமான சிலவற்றைமட்டும் இங்கே ஒருவாறு சொல்லுகிறோம். மூலவர்க்கத்தால் இப்பூமண்டலம் போர்த்தப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். ஆவரணமின்றி அடிக்கிற காற்றிலும் எரிக்கிற வெயிலிலும் கிடந்து தேய்ந்துபோன கூழாம்பாறைகளில் படர்ந்திருக்கிற பாசிமுதல் மலைகளின்மேல் சாகோபசாகமாய் ஆகாயத்தை முட்டப் பரந்தோங்கி வளர்ந்திருக்கிற தேவதாரு ஈறாகவுள்ள மூலவர்க்கத்தில் ஒவ்வொன்றிலும் எத்தனையோ ஆச்சரியமுண்டு. ஆயினும் அவற்றைக்கண்ணுற்றுக் கருத்தாய்ப் பார்ப்பவர்களுக்குமட்டுமே அவற்றினிடத்திலுள்ள விந்தைகள் ஒவ்வொன்றும் புலப்பட்டு மனத்திற்கு மகிழ்ச்சியைத்தரும். தாது, மூலம், ஜீவன் ஆகிய இம்மூன்றினுள் ஒவ்வொன்றும் சில பதார்த்தங்களின் செயற்கையாலாகியது. தாதுவர்க்கத்தில் பொருள்களுக்கு ரஸாயன சம்பந்தமாத்திரமுண்டு. ஆனால் மூலவர்க்கத்திலும் ஜீவவர்க்கத்திலும் இப்படி இருப்பதோடுகூட உயிர்நிலையும் கலந்திருக்கிறது. ஜீவவர்க்கத்தைப்போல மூலவர்க்கம் இடம்விட்டுப் பெயர்கிறதில்லை.

நீர்வாழ்வனவாகிய சிலபூண்டுகள் அடியிலுள்ள மண்ணிலிருந்து தண்ணீருக்குமேலே வளர்ந்தெழுந்து பூக்கிறதானது ஓர்வித ரசாயனத்தினாலன்றிக் கவர்ச்சியினாலன்று. மூலவர்க்கத்தைப் பலதுண்டுங் கண்டு பூமியில் நாட்டிவைத்து விருத்திபண்ணலாம். ஜீவவர்க்கத்தில் இப்படிச்செய்வது கூடாது. ஆனால் ஜீவவர்க்கத்தில் தாழ்ந்தனவாகிய கடற்காளான் போன்ற சிலவற்றைமட்டும் துண்டுதுண்டாகச் சேதித்தாலும் அவை விருத்தியடையும். ஜீவவர்க்கங்களைப் போல மூலவர்க்கங்களுக்கு இரைப்பையுமில்லை. அத்துணை உணர்வுமில்லை. தொட்டாற் சிணுங்கியைப்போலொத்த சில மூலிகைகளுக்கு ஸ்பரிச உணர்ச்சி இல்லையோவெனின் அஃது உணர்ச்சியன்று. ஏதோ அந்தப்பூண்டின் இயற்கையென்றே சொல்லல்வேண்டுமென்பது பலர்கொள்கை. ஆனால் கல்கத்தா சாஸ்திர நிபுணராகிய போஸ் என்பவர் எவ்விதச்செடிக்கும் அதற்குத்தக்க உணர்ச்சியிருக்கின்றது. ஆனால் சில செடிகளில் அது நம் கண்ணுக்குப் புலப்படுகின்றது. அநேகம் செடிகொடிகளில் அது கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆனால் சாஸ்திர ஆராய்ச்சிப் பிரகாரம் பரிசோதித்துப்பார்த்தால் அதனை நன்கு புலப்படுத்தலாம் என்று சமீபகாலத்தில் கண்டு பிடித்திருக்கின்றனர். இளமரங்கள் செடிகள் முதலியவைகளில் வஸந்த காலத்தில் மேல்நோக்கியும் இலையுதிர் காலத்தில் கீழ்நோக்கியும் ஓடுகிறதாகையாலும் மேலும் அவை இலைவழியாகப் பிராணவாயுவை வெளியேவிட்டுக் கரியமலவாயுவை உட்கொள்ளுகிறதாகையாலும், ரத்த ஓட்டமும் வியர்வையும் மூலவர்க்கத்துக்கும் உண்டென்பது சிலர் கொள்கை. இதனை நாம் பிரத்தியக்ஷமாகவும் காணலாம். ஒரு மரக்கிளையை வெட்டும் பக்ஷத்தில் அதன் பால் வடியும் பொழுது ரத்தம் சொரிவதுபோலும் அது அழுவதுபோலவும் காணப்படுகின்றதே! அவ்வாறு இருக்க எப்படி மரஞ்செடிகளுக்கு உணர்ச்சியில்லையென்று சொல்லலாம்.?

ஜந்துக்களை உறுப்புறுப்பாய் வெட்டினால் அவ்வுறுப்புக்கள் மூலவர்க்கத்தின் உறுப்புக்களைப்போலப் பிழைக்கிறதில்லை. மூலவர்க்கத்துக்கு ஜீவவர்க்கத்துக்கிருப்பதுபோல ரத்த ஓட்டமும் உயிர்ப்பும் உண்டென்று வைத்துக்கொள்ளினும் அவை அக்கனை சிறந்தனவ

ல்ல. மூலிகைகள் நிலத்தில் வேரூன்றியிருந்தாலும் நீரிலிருந்தாலும் அல்லது அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தாலும் வாயு உஷ்ணம் குளிர்ச்சி, வெளிச்சம் இவற்றின் ஆதாரத்தினாலேதான் விருத்தியடையவேண்டும். பெரும்பான்மையாய் மூலவர்க்கங்களெல்லாம் மண்ணிலிருந்தால் பெருத்துவளரும்.

ஆனால் நீர்வாழ்வன, புல்லுருவி, ஆகாயப்பூண்டு முதலியவற்றின் வளர்ச்சிக்கு மண் அத்தனை அவசியமன்று. ஆதலால் மண்ணையே பிரதானமென்று சொல்வது அத்துணை சிறந்ததன்று. மூலவர்க்கங்கள் பூக்கின்றவையென்றும், பூவாதவையென்றும் இரண்டு பெரும் பிரிவையுடையன. மரம், பூண்டு, புல், முதலியன பூக்கின்றவை. மரங்களின் வளர்ச்சி பலவகை. தேவதாருவைப்போலொத்த சில ஜாதி மரங்கள் மேற்பக்கமாய் வருஷம் ஒன்றுக்கு ஒவ்வொரு பட்டையாக விட்டுப்பெருத்து வளரும். பனைமரம் இவ்வாறு பட்டைவிடுகிறதில்லை. அதன் உள்ளேயுள்ள ஈர்க்குக்கள் நாளடைவில் ஒன்றுகச்சேர்ந்து வயிரமாகும். நீர் வேம்பைப்போலொத்த மரங்கள் நுனி உயர்ந்து வளரும். வெளிப்புறமாய்ப் பட்டைவிட்டுப் பருக்குமவைகளின் இலையில் நரம்புகள் பின்னல்போலப் பரந்திருக்கும். உட்புறமாய் வளருமவற்றின் இலையின் நரம்புகள் ஒன்றற்கொன்று சமதூரமுள்ளவைகளாக விருக்கும். ஆனால் கடற்பாசியைப்போலொத்தவைகளில் இந்த வித்தியாசந் தெரிகிறதில்லை. மூலவர்க்கங்கள் பலவிதமாக விளைவிக்கப்படுகின்றன. அவற்றுள் வித்திலிருந்து முளைப்பதுதான் சாதாரணம். பூக்கிறவைகளெல்லாம் இப்படித்தான் ஒவ்வொரு வித்திலுள்ளும் இலைகள் அற்புதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வித்துக்கள் நிலத்தில் வேரூன்றி அவற்றிற்குள்ளே இருக்கிற இலைகள் வெளிப்பட்டு விரியுமளவும் அவ்விலைகளைக் காப்பாற்றுகிற சத்து அவற்றிற்குள்ளே அமைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதிக உஷ்ணமிருந்தால் அவ்விலை தீய்ந்துபோம். குளிர்ச்சியாயிருந்தால் அழுகிப்போம். இப்படிக்கெல்லாம் கெடாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே அவற்றிற் கேற்றவண்ணமாக ஆவரணமுண்டு.

தேங்காய்க்கு நார், ஓடு முதலிய பலமான ஆவரணங்களிருக்கிறபடியால், அது கடலில் ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவிற்குச் சென்

று அங்கே தங்கி முளைத்து விருத்தியாகிறது. ஜாதிக்காயின் மேலோடு தோலைப்போல கெட்டியானது. உருளைக்கிழங்கை விதைவேர், இரண்டினாலும் பயிர் செய்யலாம். இஃது உஷ்ணதேசங்களில் பூமட்டுந்தான் பூக்கும். நன்றாய்க் கிழங்கு வைக்கிறதில்லை. சீதளதேசங்களில் பூக்கிறதில்லையென்றாலும் கிழங்குமட்டும் நன்றாய் வைக்கும். கிளைகளை வளைத்து நிலத்தில் பதியவைத்திருந்து வேரூன்றிய பிறகு அவற்றைப் பெயர்த்து நடுவதற்குப் பதி யென்றுபெயர். ஆலமரங்களின் கிளையைத் தறித்து அதன்பால்வடியுமளவும் வெயில் படாமல் வைத்திருந்து அதனோடு மற்றொன்றைச் சேர்த்து ஒரு உடல்போல ஒட்டிக்கட்டிப் பயிர்செய்வதற்கு ஒட்டு என்று பெயர். சிலவற்றின் இலைகள் கூட முளைத்துப் பயிராவதுண்டு. இவ்வாறாக மூலவர்க்கமானது அதன் கிழங்கு, வேர், அடி, கிளை, இலை, விதை இவை எவ்வாற்றாலும் பயிராகிறது. மூலவர்க்கமானது நிலவளத்துக்கும் தேசப்பாங்கிற்கும் பயிர்ச்சி செய்யும் திறனுக்கும் ஏற்றபடி விந்தை விந்தையாய் உருமாறும். உருளைக்கிழங்கானது அமெரிக்காவின் உஷ்ண மண்டலத்திற்குரியது. அதை அங்கே கண்டு பிடித்தபொழுது அஃதுஉணவுக்கேற்றதல்லாத ஜல்லிவேருள்ளதாயிருந்தது. அதைப் பிரத்தன் நாட்டில் பயிர் செய்ததில் உணவுக்கேற்ற சிறந்த பெருங்கிழங்காயிற்று. ஒற்றை வரிசை மடலுள்ள காட்டு ரோஜாச்செடிகளைக் கொண்டுவந்து பக்குவமாய்ப் பயிர்செய்தல் மடல் அதிகமாக விட்டு கிரமமாய் அழகாய்ப் பலவரிசையுள்ளதாய்ப் புஷ்பிக்கும். முன்னிருந்த புல்லிதழும் பூந்தாதுவும் மட்டுப்படும். கைத்திறமாய்ப் பயிரிட்டுப் பண்படுத்தினால் அசங்கியமான ஐந்து மடலுள்ளது நூற்றுக்கணக்கான அழகிய மடல்களைவிட்டுப் புஷ்பிக்கும். நீல நிறமுள்ள பூவானது வெண்மையாகவாவது சிவப்பாகவாவது மாறுமேயன்றி இன்னும் அதிக பிரகாசமுள்ள நீலவர்ணமாக மாறாது. நாம் உண்கிற கோதுமை, இலந்தைக் கனி முதலியன ஆதியில் வெகு அற்பமாயிருந்தவைகளே. சீதமண்டலத்திலுள்ள படர்கொடிகளெல்லாம் சிறிதானவை. உஷ்ணமண்டலத்திலுள்ள படர்கொடிகளில் சில ஓர் ஆட்பெருமனுக்கும் அதிகமானவை. அவை உயர் மரங்களையெல்லாம் சுற்றி ஒரே மூட்டாய் மூடிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் அதிக ஆச்சரியமாயிருக்கும். பிரம்புக்கொடிகள் ஆயிரம்

அடி நீளமளவும் வளரும். ஆல் முதலிய சில விருக்ஷங்கள் மகா பெரிதானவை.

> தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
> தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதே யாயினு மண்ணல் யானை
> அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
> மன்னர்க் கிருக்க நிழலாகும்மே.

இந்தியாவில் பரோச்என்னும் நகரத்துக்குச்சமீபத்தில் நருமதையாற்றிலுள்ள தீவில்'கபீர்பர்'என்னும் ஒருபெரிதானஆலமரமிருக்கிறது. அதற்கு மூவாயிரத்துக்கு மேலான விழுதுகளுண்டு. அவற்றுள் முன்னூற்று ஐம்பது விழுதுகள் மிகப்பெரியவை. ஆல் முதலிய மரங்கள் மேன்மேலும் அபிவிருத்தி யடைவதைச்சுட்டி, "ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரோடி மூங்கில்போல் சுற்ற முசியாமல் வாழ்ந்திருப்பாய்" என்பது பழமொழி. இந்தப்பழமொழியைச் சொல்லிச்சிலர் வாழ்த்துகிறதுமுண்டு. ஒருவகையான மரம் ஆலினும் பெரிது. அது ஆப்பிரிக்காவின் மேல்கரையில் எராளமாய் வளருகிறது. அம்மரத்தை முதலில் கண்டுபிடித்தவர் அடமன்ஸன் என்பவர். ஆதலால் அது காரணமாக அம்மரத்துக்கு அவர் பெயரிட்டு இருக்கிறார்கள். அந்தச்சாதி மரங்களில் ஒன்றின் அடிமரம் 104 அடி சுற்றளவுள்ளது.

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற புஷ்பங்களில் 'விக்டோரியாரிஜியா' என்பது மிகவும் பெரிதானது. அஃது ஓர் வகையான ஆம்பல். அதன் இலை பதினெட்டு அடி சுற்றளவும், பூ நான்கடி சுற்றளவும் கொண்டது. இந்த ஆம்பல் தென் அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் கயானாவில் அகப்படும்.

ஓர் அற்புத விநோதன்.

மைசூர் புது திவான்.

மிஸ்டர் வி. பி. மாதவராயர் அவர்கள் மைசூர் சம்ஸ்தான திவானாக நியமனம் செய்யப்பட்டதைக் கேள்வியுற்று ஆனந்தமடைந்தோம். அவர்கள் திருவாங்கூர் சம்ஸ்தான திவானாக மிகவும் சுறுசுறுப்பாக வேலைபார்த்து வந்ததை யாவரும் அறிவார்கள். இவர் மிக்க ஊக்கமுள்ளவர். ஜனங்களிடம் அநுதாபமுடையவர். ஸர் சேஷாத்திரி ஐயர் முதலிய பெரிய நிபுணர்களிடமிருந்து வேலை பழகியவர். இவர் தஞ்சை ஜில்லாவைச் சார்ந்தவரே. கும்பகோணத்தில் பிரசித்திபெற்ற போதகாசிரியராகிய போர்டர் துரையிடம் கல்வி பயின்றவர். 1869-ம் வருஷம் பீ. ஏ. பட்டம்பெற்றவர். ஸர் மாதவராயரின் பந்துக்களில் ஒருவர். முதல் முதல் இவர் பங்களூர் மிஷன் பாடசாலையில் உபாத்தியாயராக நியமனம் பெற்று ஒரு வருஷகாலம் அதில் வேலைபார்த்துப் பிறகு மைசூர் ஸம்ஸ்தான உத்தியோகத்தில் அமர்ந்தவர். மைசூரில் பிரசித்திபெற்ற திவான் ரெங்காச்சார்லு அவர்கள் நாளில் இவர் மைசூர் ஸம்ஸ்தான உத்தியோகத்தை வகித்தார். அந்த மேதாவியும் இவருடைய குணாதிசயங்களை மெச்சி அவருக்கு ஆதரவாயிருந்து வந்தனர். அக்காலத்து ரெஸிடெண்டுகளும் மகாராஜாவும் இவரிடம் மிக்க அன்புபாராட்டி வந்தார்கள். தம் உத்தியோகத்தில் கண்ணும் கருத்துமுடையவராயிருந்து தினேதினே வேலைத்திறமை வாய்ந்தவரானார்.

மைசூர் இராஜ்யத்தில் பிளேக் என்னும் கொள்ளை நோய் தோன்றியபொழுது அதனைத் தடுக்க நம் இராயர் அவர்களை பிளேக் கமிஷனராக நியமித்தார்கள். அப்பொழுது அவர் காட்டிய ஊக்கம் அவருக்குத் தக்க பலனைப் பின் அளித்து, இவருடைய ஊக்கத்தையும் சுறுசுறுப்பையும் கண்டு காலஞ்சென்ற மகாராஜா அவர்கள் இவருக்கு 1500 ரூ. இனமளித்தார்கள். மைசூர் மகாராணியார் பாடசாலைக்கு அக்கிராசனாதிபதியாக இருந்து பல நன்மைகள் செய்தனர். இவருக்கு ஸி. ஐ. இ பட்டமும், கேசரிஹின்ட் தங்கப் பதக்கமும் கொடுக்கப்பட்டன. மைசூர் நாட்டில் பல சீர்திருத்

தங்களைச் செய்து ஜனங்களின் நேசத்தை மிகவும் பெற்று விள ங்கினர். பொது நன்மையை நாடுவதும் நல்லொழுக்க நற்குணங் களை விருத்தி பண்ணுவதுமே இவரது சிறந்த குணம் திருவாங் கூரில் திவான் கே. கிருஷ்ணசாமிராயர் அவர்களுக்குப் பிறகு இவர் திவானாக நியமனம் பெற்றார். லார்ட் ஆமதில் இவரைத் திவானாக நியமித்ததற்குக் காரணம் திருவாங்கூர் சம்ஸ்தானத்தின் சீர்திருத்தங்களைக் கவனித்தே. கல்வியற்ற கீழ் ஜாதியாருக்குப் பிரதமசிக்ஷை இனமாகக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். கோவில் சிப்பந்திக்கணக்கு விஷயங்களை நன்றாய் மேல்பார்த்து வரும் படி ஒரு கமிஷனரை நியமனம் செய்தார். 1904வருஷத்தில் மகாரா ஜா அவர்களுடைய அனுமதியின்பேரில் "திருவாங்கூர் ஸ்ரீமூலம் மகா ஜனசபை" என்று ஒரு பொது ஜன சபை ஏற்படுத்தினர். இச்சபை மைசூர் ஜனப்பிரதிநிதி சபையைப் போன்றது. குடிகள் தங்கள் குறைகளை கவரன்மெண்டாருக்குத் தெரிவித்துக் கொள்ளவும் அவை களைக் கவரன்மெண்டார் நேரில் குடிகளிடம் அறிந்து சீர்திருத்தங் கள் செய்யவும் ஏற்பட்ட உத்தம சபை. இவைபோன்ற சபைகளை த் தசரதர் முதலிய அரசர் பலமுறை கூட்டி யோசித்து இராஜகாரி யங்களை ஜன அபிப்பிராயத்துக் கிணங்க நடத்தி வந்தார்களென்று ஸ்ரீமத் இராமாயண மூலமாய் நன்கு விளங்குகின்றது. இவர் காலத் தில் தான் தானிய ரூபமாகக் கொடுக்கப்பட்ட தீர்வை பண ரூபமாக ஏற்பட்டது. இது குடிகளுக்கு அத்துணை அநுகூலமென்று நாம் கூறோம். ஆங்கில அரசாட்சியை அநுசரித்து ச்செய்யப்பட்ட ஒழு ங்காகுமே ஒழிய குடிகளுக்குச் சௌகரியமான விஷயமாகாது. திற மையோடு கூட மரியாதையும் பெருந்தன்மையும் வாய்ந்தவர். ஸ்ரீமத் சங்கராசாரியார் அவர்களிடத்தில் இவருக்குப் பக்தி மிகுதியாயுண்டு. வேதாந்த சாஸ்திரத்தை அப்பியாசிக்க வேண்டுமென்ற எண்ணத் துடன் அதனிடத்தில் மிகவும் பக்தியுள்ளவர். இவர் நம் நாட்டுக்கு ஒரு பெரும் ஆபரணமேயாவார் என்பது திண்ணம்.

பத்திராதிபர்.

உலகத்திற்கு நன்மை செய்வது.

நாம் பிறருக்குக் கடமைப் பட்டிருக்கிறோமென்பது அவர்களுக்கு உதவி புரிவதே. அஃதாவது உலகத்திற்கு நன்மை செய்வதேயாம். உலகத்திற்கு நாம் யாதுகாரணம்பற்றி நன்மை செய்யவேண்டும்? ஆலோசிக்குமிடத்து, நாம் பிறருக்கு உதவிபுரிவதால், நமக்கே உதவி செய்துகொள்ளுகின்றோ மென்பது தெளிவாய் விளங்கும் ஆனது பற்றியே பிறருக்கு உதவி புரிவது தத்தமக்கு இன்றியமையாததோர் கடமையென ஒவ்வொருவரும் அறிவது அவசியம். நாம் ஊன்றிப் பார்த்தால், உலகம் நம் உதவியை விரும்பியதல்ல வென்பது நன்கு விளங்கும். நானுகினும், நீயாகினும், உதவி செய்யவேண்டுமென்று இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டதன்று. நான் ஒரு காலத்தில் ஓர் உபந்நியாசம் வாசித்தேன். அதில் கண்டிருந்ததாவது—“இவ்வுலகம் மிக்க நன்மை வாய்ந்துளது. ஏனெனில் இதில் நாம் பிறருக்கு உதவி புரிவதற்கு, அவகாசமும், சமயமும் கிடைக்கின்றது” என்பதே. மேலாகப் பார்க்கு மளவில் இதுமிகவும் நேர்த்தியான தோற்றமே. ஆனல் ஒரு விஷயத்தில் இது சாபமாக முடிகிறது, ஏனெனில் நம்முதவியை இவ்வுலகம் விரும்புகின்றதென்று சொல்வது ஈசுவர திருவுள்ளமன்றல்லவா? இதில் தீங்கு நிறைந்துள்ள தென்பதை மறக்க நம்மாலியலாது. என்றாலும் பிறருக்கு உதவி புரிவதையே நம்முள் சிறந்த கொள்கையாகக் கொள்ளவேண்டும். பிற்காலத்தில் அது நமக்கே உதவியாவதைக் காணலாம். நான் சிறுவனயிருக்கையில் சில வெள்ளைச் சுண்டெலிகளை வளர்த்தேன். அவைகள் ஒரு கூட்டில் அடைக்கப்பட்டு அதில் சிறு சக்கிரங்களும் அவைகளுக்கென்றே அமைக்கப்பட்டிருந்தன. அச்சுண்டெலிகள் அச்சக்கிரங்களின் மேற் செல்ல விரும்பியபோதெல்லாம், அச்சக்கிரங்கள் சுழன்று வந்தனவேயன்றி, அவ்வெலிகள் அவைகளின்மேல் ஒருபோதும் சென்றனவல்ல. ஆதலின் இவ்வுலகமும், இவ்வுலகத்திற்கு உதவி புரிவதும் இத்தன்மையதே. செய்யும் உதவி யென்னவெனில் நீ ஓர் வித பயிற்சியை யடைகின்றாய். இவ்வுலகம் நன்றுமன்று, தீதுமன்று ஒவ்வொருவனும் தனக்கென்றே ஒவ்வொரு உலகத்தை உண்டு பண்

ணிக்கொள்ளுகிறான். ஒரு குருடன் இதனை நினைப்பானாயின் இது மிருதுவாகவாவது, கடினமாகவாவது சீதளமாகவாவது, அல்லது உஷ்ணமாகவாவது தோற்றும். நாம் சுகதுக்க ரூபமாய் இருக்கிறோம். இந்த நாம் பற்பல ஸமயங்களில் கண்டுளோம். இளைஞர்கள் குணக்கியராயும் முதியோர் தோஷக்கிராஹிகளாயு மிருக்கிறார்கள். இளைஞர்கள் ஆயுள் நீட்சியை யுடையவர்களாயும், வயோதிகர் தம்மிட ஆய்ள் பெருமையால், துன்பமுறுபவர்களாயு மிருக்கிறார்கள். அவர்கள் வாழ்நாளோ முடிவுக்கு வந்துவிட்டது. இரு தரத்தினரும் அறிவினரே. இச்சீவன் நன்றுமன்று தீதுமன்று, அஃது இவ்வுலகத்தை நோக்கிச் செல்லும் பல்வகைஉபட்டமனத்தின் நிலைமையைப் பொறுத்ததாகின்றது. மிக்க அனுபோகமுள்ளவன் இதை நன்றென்றும் தீதென்றுங் கூறுவன். நெருப்பு தன் இயல்பினால் நன்றுந் தீதுமாகின்றது. அது நமக்கு மிதமான சூட்டைத் தரும்போது நன்றென்கிறோம். அது நமது விரலைச்சுடின் தீயதென்கிறோம். என்றாலும் அது நன்றுமன்று, தீதுமன்று. நாம் அதனை உபயோகப்படுத்துங் காலத்தில் நன்றுந் தீயதுமாகிய உணர்ச்சியைத் தருகின்றது. ஆதலின் இவ்வுலகமும் இத்தன்மையதே, இவ்வுலகம் பூர்ணமானது. முற்றுப்பெற்ற தென்னெனின், அது வேண்டுபவைகளை யடைய சித்தமாயிருக்கின்றது. ஆதலின் அஃது இயற்கையினாலேயே செல்லக்கூடியதென்பது நிச்சயம். நாம் அதற்கு உதவி செய்யவேண்டுமென்று விரும்புவ தனாவசியம். ஆயினும் நாம் எப்பொழுதும் நன்மையையே புரியவேண்டும். நன்மை புரிவது நமது பாக்கியம் என்பதாகவெண்ணி அதையே நமது முக்கியகொள்கையாகக் கொள்ளவேண்டும். நீ உன் கையில் ஐந்து ரூபா ஏந்தி ஒரு மேடையில் நின்று கொண்டு ஏழைகளே இந்தாருங்கள் என வேண்டாம். ஆனால் ஏழையங்கிருக்கின்றானே யென்றும் அவனுக்கு உதவி புரியும் பாக்கியம் உனக்குக் கிடைத்ததே என்றும் எண்ணிக்கொள். கொள்வோர் சிறந்தவரன்று. கொடுப்பவரே பெரும்பேறு பெற்றவராகின்றார் உனது அன்பிற்கும் அருளுக்கும் இவ்வுலகம் இடம் தந்து, நம்மைப் பரிசுத்த முள்ளவர்களாகச் செய்கிறதே என நீ விசுவாசமுடையவனா யிருத்தல் வேண்டும். எல்லா நற்செய்கையும் நம்மைப் பரிசுத்தப் படுத்துகின்றது. நாம் எவ்வகைப்பட்ட அறங்களையும் செய்யலாம். ஒரு வைத்திய சா

லை கட்டு. பாதைகள் உண்டுபண்ணு. அல்லது தர்மசத்திரங்கள் கட்டு. நாம் ஒரு தர்மத்தை ஸ்தாபித்து, 20-30 லக்ஷம் சேகரித்து அதில் 10 லக்ஷத்திற்கு ஒரு வைத்தியசாலை கட்டலாம். மற்றொரு பத்து லக்ஷத்திற்கு கூத்தும் குடியும் கொண்டாடி மற்றைய பாகத்தில் பாதியை உத்தியோகஸ்தர்கள் கொள்ளை கொண்டால், மிகுதியுள்ள கொஞ்ச பாகம் ஏழைகட்குச் சேரும். ஆனால் இவைகளினால் என்னபயன். ஒரு பெருங் காற்றடித்தால் இடிந்து தகர்ந்து விழுந்து விடுமே. ஒரு பூகம்பம் உண்டானால் நம்முடைய பாதைகளும், வைத்தியசாலைகளும், பட்டினங்களும், கட்டடங்களும் அழிந்துவிடுமே. இப்பொழுது நாம் செய்வது என். உலகத்திற்கு நன்மை செய்வதென்னும் பயனற்ற வார்த்தையை யாடா தொழிவோம். இது உன்னிடத்திலேனும் உபகாரத்தை எதிர் பார்த்ததன்று. ஆயினும் நாம் உழைத்தே, அடிக்கடி நன்மைசெய்யவேண்டும். அது நமக்கே நன்மையாதலின் இம்மார்க்கம் ஒன்றுதான் நம்மைப் பூர்ணமாக்க வல்லது. ஓர் யாசகன் நம்மிடம் ஒரு பைசாவேனும் கடன் படவில்லை. நாம் தான் அவனிடம் கடன் பட்டிருக்கிறோம், ஏனெனில் நம்முடைய இரக்கத்தையும் தர்மத்தையும் அவனிடம் செலுத்துகிறதற்கு அவன் நமக்கு அவகாசம் கொடுப்பதால் நாம் உலகத்திற்கு நன்மை செய்கின்றோம், செய்யவல்லோம், இன்னின்னருக்கு இவ்வளவு உபகாரம் செய்திருக்கின்றோமென்று நினைப்பது முற்றும் பிழையாகும். அஃது ஓர் அறிவீனமான எண்ணத்தையும் துன்பத்தையுமே தருவனவாம். நாம் ஒருவனுக்கு ஒரு நன்மை செய்திருந்தால் அதற்கு அவன் வந்தனமளிக்கவேண்டுமென்று நினைக்கிறோம். அவன் அப்படிச் செய்யாவிடின் நாம் அதற்கு வருந்துகின்றோம். நாம் ஒன்றிலும் விருப்பமில்லாமலும், ஒன்றையும் எதிர்பார்க்காமலே உலகத்திற்கு நம்மாலியன்ற வரையில் நன்மை செய்யவேண்டும். ஏதொன்றிலும் விருப்பு வெறுப்பின்றிச் செய்யும் நமது செய்கைகளினால், நமக்கு எந்நாளும் துக்கமேனும் கஷ்டமேனும் வருவதில்லை. இவ்வுலகம் எந்நாளும் சுகதுக்கங்களோடு கூடியே செல்லுந்தன்மையது.

பூர்வ நித்ய தரித்திரனாகிய ஓர் ஏழை இருந்தான். திரவியம் சம்பாதிக்க வேண்டுமென்கிற ஆவல் தினந்தோறும் அவனை விடாது

மன்முடி வந்தது. ஒரு பூதத்தைப் பேனும் யட்சணி தேவதையை யேனும் மந்திரத்தினுல் வசியம் செய்து கொண்டால் திரவியமேனும் தனக்கு விருப்பமான மற்றெதுவேனும் அதனைக்கொண்டு வரவழைத்துக் கொள்ளலாமென்று அவன் கேள்விப்பட்டிருந்தான். ஆதலின் ஒரு பூதத்தை வசியம் செய்யவேண்டுமென்கிற ஆவல் அவனுக்கு அதிகரித்தது. அவன் அதற்காக ஒரு குருவைத் தேடிப் புறப்பட்டான். அவன் ஒரு யோகீசுவரரைக்கண்டு அவருக்கு வந்தனை வழிபாடு செய்து ஸ்வாமி, எனக்கொரு பூதம் வேண்டும். அதனைக் கொண்டு எனக்கு வேண்டியவைகளை யடைய விரும்புகிறேன். ஆதலால் தேவரீர் கிருபை செய்து, எனக்கு அதற்குத் தகுந்த உதவி புரிந்தருள வேண்டும் என வேண்டினன். அதற்கு அந்த யோகீசுவரர் அது தக்கதன்றென அவனுக்கு நற்புத்தி புகட்டியும், அவன் அவர் மொழியைக் கேளாது மேலும் மேலும் பலவாமுய் அவரை வேண்டிக்கொள்ள அவர் அவன்மீது கிருபைபுரிந்து ஒரு மந்திரத்தை யுபதேசித்து சக்கிரமமைந்தவோர் யந்திரமும் அவனுக்குக் கொடுத்து இதனை யெடுத்துக்கொண்டு போய் இந்த மந்திரத்தை ஜெபித்தால், ஒரு பூதம் தோன்றும், அது உனக்கு வேண்டியவற்றைச் செய்யும். ஆனல் நீ அதற்குச் சதாவேலை கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும். இல்லாவிடில் அஃது உன்னைக் கொன்றுவிடும்.” என்முர். அதற்கு அவன் “ஸ்வாமி அது எனக்கு மிகவும் சுலபமான விஷயம். அதன் வாழ்நாள் வரையில் அதற்கு வேலையிட வல்லமை எனக்குண்டு” என்று சொல்லி ஓர் ஏகாந்தமான இடத்தை நாடிச்சென்று, அம்மந்திரத்தை ஜெபித்தான், அப்பொழுது அவன் எதிரில் வக்கிர தந்தங்களோடுங்கூடிய கோரரூபமான ஓர் பெரும் பூதம் தோன்றி “ நான் உன் மந்திரபலத்தினுல் உனக்கு ஆட்பட்டேன். நீ எனக்கு ஸதா வேலை யிட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். அப்படி நீ எனக்கு வேலையிடாமல் அரைக்கணமேனும் தாமதித்தால், அப்பொழுதே உன்னைக் கொன்றுவிடுவேன்.” என்றது அதற்கு அந்த மனிதன் அப்பூதத்தைப்பார்த்து “ எனக்கு ஒரு அரண்மனை கட்டிக்கொடு” என்முன். இவன் இதனைச்சொல்லி வாய் மூடுமுன்னரே அரண்மனை கட்டியிருந்தது. பின்னர் பூதம் மற்றும் வேலை யாதுளதென, மனிதன் “ எனக்கு வேண்டிய திரவியங்கொ

ண்டுவா" என்றனன். அப்பூதம் அரைக்கணத்தில் அவன் கண்டு வியக்கத்தக்கதாய்ப் பெருந்திரள் திரளாக திரவியத்தைக் கொணர்ந்து அவன் எதிரில் சேர்ப்பித்தது. இன்னம் வேலையாது என அதற்கு அம்மனிதன் "இக்காட்டினையழித்து பெரும் வளமுளதாயதோர் பட்டணமாக்குக" எனலும் அந்தப்படியே அந்தப்பூதம் அரைநொடிப் பொழுதினில் செய்துமுடித்தது "இன்னம் எனக்கு என்ன வேலையிடுகின்றீர்" என அம்மனிதன் மிகவும் பயந்து அட! என்ன ஆச்சர்யம், அசாத்தியமான வேலைகளை நாம் சொன்னாலும், இது அக்கணத்திலேயே செய்து முடிக்கின்றதே, இனி இதைச் செய்யச் சொல்வதற்கு யாதொரு வேலையையுங் காணேமே, யாது செய்கிறதென்று துக்கிக்கையில், பூதமும் இவனைத் தின்றுவிடுகிறேனென்று பயமுறுத்த இவனும் பயப்பிராந்திகொண்டு, கைகால் நடுநடுங்க, விதிர் விதிர்த்து, யோகீஸ்வரரிருக்கும் திக்கை நாடித்தேடி யோடி. யோகீசுவரரைக்கண்டு அவர் பாதத்தில் விழுந்து தண்டனிட்டு "சுவாமி என்னைக் காப்பாற்ற வேண்டும் தேவரீர் உபதேசித்த மந்திரத்தை ஜெபித்தேன். ஓர் பூதம் தோன்றிற்று. அதற்கு எத்தகைய அசாத்தியமான வேலை சொன்னபோதிலும் சொல்லி வாய் மூடுமுன்னரே செய்து முடிக்கின்றது. அதற்கு இனி இடுவதற்கு ஓர் வேலையுங் காணேன். வேலையில்லாவிடில் என்னைத் தின்றுவிடுகிறேனென்கிறது. இவ்வாபத்தினின்றும் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று பலவாறாய் வேண்டினன் அப்போது அப்பூதம் அவ்விடத்துந் தோன்றி, அவனைத் தின்றுவிடுகிறேனென்று பயமுறுத்திற்று. அத்தருணத்தில் அந்த யோகீசுவரர் அம்மனிதனை நோக்கி "இதோ எதிரிலிருக்கும் நாயினுடைய சுருண்ட வாலை உடனே அறுத்து அதன் கையிற்கொடுத்து அதனை வேறே வளைவின்றி நிமிர்த்தச்சொல்." என்றார். இம்மனிதன் அவ்வண்ணமே செய்ய அந்த வாலினை அப்பூதத்தின் கையிற்கொடுத்து இதை வளைவின்றி நேரே நிமிர்த்திக்கொடு என்றான். அப்பூதம் அதை வாங்கி மெதுவாயும் ஜாக்கிரதையாயும் நேரே நிமிர்த்திற்று. ஆனால் கையை விட்டவுடனே அது முன்போல சுருண்டுகொண்டது. மறுபடியும் அதனை நேரே நிமிர்த்திற்று. அப்பொழுதும் கையையெடுத்த உடனே பழயபடி சுருண்டுகொண்டது. மூன்றாவது தடவையும், வெகு யோச

னையோடும் தந்திரத்தோடும், பொறுமையாய் அதனை நிமிர்த்திக் கையை விட்டது. அஃது அதிகமுடுக்கோடுசடக்கென பழையபடியே சுருண்டுகொண்டது. இப்படியே பலநாள் வரையில் அது பாடுபட்டுப்பார்த்தும் அது நிமிர்ந்து நிற்கவில்லை. கடைசியில் அப்பூதம் அட! இதென்ன ஆச்சர்யம், எத்தகைய வேலையையும் கண்மூடிக் கண் திறக்குமுன்னமே செய்துமுடிக்க வல்லநான், இச்சிறு காரியத்தைச் செய்துமுடிக்க கூடவில்லையே என்று மனம் வருந்தி, மனிதனை நோக்கி, “இத்தகைய உபத்திரவத்தில் என் ஜென்மத்தில் அகப்பட்டதில்லை. நானே கைதேர்ந்த பழையபூதம். நான் உன்னோடு சமாதானம் செய்துகொள்ளுகிறேன். என்னை விட்டுவிடு, உன் பிராணனுக்கும் உன் சொத்திற்கும் யாதொரு தீங்கும் செய்வதில்லை” என்று வேண்டிக்கொண்டது. அம்மனிதனும் சந்தோஷமடைந்து அவ்வண்ணமே ஒப்புக்கொண்டான்.

இவ்வுலகம் அந்த நாயினுடைய சுருண்டவாலுக்குச் சமமானது ஜனங்கள் அவ்வாலினை நேரேநிமிரச்செய்ய நூற்றாண்டுக் கணக்காய்ப் பாடுபடுகிறார்கள். அவ்வாலினைவிட்டால் அஃது உடனேசுருண்டுகொள்கிறது. அன்றேல் வேறுஎவ்வாறாக அஃது ஆகக்கூடும். மனிதன் ஒன்றிலும் பற்றில்லாமல் வேலைசெய்ய முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு அவன் ஆக்கிரஹமுள்ளவனாகான். இவ்வுலகம்நாயின் சுருண்ட வாலுக்குச் சமான மென்றும் அதை நிமிர்க்க ஒருபோதும் முடியாதென்றும் தெரிந்தமாத்திரத்தில், நாம் பிடிவாதமில்லாதவர்களாகிறோம். ஆக்கிரஹமுள்ளவர்கள் எக்காலத்திலும் உண்மையான வேலையைச் செய்ய முடியாது. உலகத்தில் ஆக்கிரஹம் என்பதில்லாமலிருக்குமேயாயின் தற்காலம் உள்ளதைக்காட்டிலுமின்னும் எத்தனையோமடங்கு அபிவிருத்திக்கு இடமுண்டு. ஆவேசந்தான், விருத்திக்கு காரணமென்று நினைப்பது சுத்த அறிவீனம். விருத்திசெய்யாமலிருப்பதுமட்டுமின்றி, அது விருத்திக்கு ஓர் பெருந்தடையாகவுமிருக்கிறது. அது மனிதர்களுக்குள் கோபத்தையும் பகைமையையுமுண்டாக்கி ஒருவரோடொருவர் தயாதாக்ஷிண்யமின்றிச் சண்டைசெய்து கொள்ளும்படியாகவும் செய்கிறது. நாம் எதைச் செய்கிறோமோ அல்லது எதை உடைத்தாயிருக்கிறோமோ அதையே இவ்வுலகத்தில் எல்லாவற்றினும் மேம்பட்டதாகக் கருதுகிறோம். மற்றவைக

ளெல்லாம் உபயோகமற்றனவென நினைக்கிறோம். ஆதலால் உனக்கு ஆக்ரஹம் உண்டாகும்போலத் தோன்றினால் உடனே நாயினது சுருண்டவாலை நினைத்துக்கொள். நீ வீணாக வருந்தித் தூக்கமில்லாமல் செய்துகொள்ள வேண்டாம். உலகம் தானே செல்லும். ஆக்கிரஹத்தைத் தவிர்ப்பாயானால் அப்பொழுதுதான் நீ நன்றாய் வேலை செய்வாய். சமபுத்தியும், சாந்தமும், நடுநிலைமையும், பொறையும், அருளுமுடையவரே இவ்வுலகத்தில் நற்கிருத்தியங்களைச் செய்பவராவர். மற்றையோர் செய்வது எல்லாம் வீண். ஆக்கிரஹம் உள்ளவனிடத்தில் ஒருவருக்கும் பச்சாத்தாபமில்லை.

ஸ்ரீவாணீ விலாஸினீ.

ஜகத்ஜோதி.

(முன் தொடர்ச்சி.)

ஷாஜிஹானைத் துரத்தித்துரத்தியடித்து அவன் எண்ணங்களையெல்லாம் சீர்குலையச்செய்து சக்கரவர்த்தியின் மனங்குளிரும்படி முகபட்கான் செய்ததாக முன்கூறினோம். அவனது வெற்றியைக் கண்டு மிகவும் கொண்டாடிச் சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் அவனுக்குப்பல விருதுகள் அளித்தனர். அவனுக்குச் சக்கரவர்த்தி தம் எண்ணத்தை வெளிப்படுத்தி உபசாரக்கடிதங்களும் எழுதினான். ஆனால் அம்மதிப்புக்கு நிலையுண்டோ? "அரசனும், நெருப்பும், பாம்பும் சரி" யென்று சொல்லுவது பொய்க்குமா. திடீரென்று அவனிடமிருந்த மதிப்பெல்லாமாறி விட்டது. சக்கரவர்த்தி அவனிடம் வைத்திருக்கும் அதிகமதிப்பைக் கண்டு அழுக்காறடைந்து அதனைக் குறைக்க யத்தனித்தாள். ஜகத்ஜோதி பிரபுக்களுக்கும் அவனிடத்தில் பொறாமையுண்டாயிற்று. பலமுறை ஜகத்ஜோதியும் பிரபுக்களும் அவனைப் பற்றிச் சக்கரவர்த்தியினிடம் அவதூறு சொல்லி அவன் மனத்தைக் கலைத்தனர். கரைப்பார் கரைத்தால் கல்லுங்கரையுமன்றோ. சொற்பகாலத்தில் சக்கரவர்த்திக்கு மொகபத்கானிடம் இருந்தமதிப்புக்

குறைவடையத் தொடங்கிற்று. அவ்வாறு குறைமாறுதலுண்டாகிறதை அவன் அறிந்து பலவாறு துக்கித்தான். அவனுக்கு இருந்த இராஜவிசுவாசமும் அன்பும் தளர்ச்சியடையத் தொடங்கின. கோட்சொல்லிகளுக்கும் குண்டுணிகளுக்கும் காலம் வாய்த்தது. ஜகத்ஜோதியினிடம் ஒரு பிரபுசென்று சக்கரவர்த்தியின் மகனை மொகபத்கான் கொலைசெய்ய எண்ணியிருப்பதாகத் தெரிவித்தான். அவள் உடனே அதனைச் சக்கரவர்த்திக்குத் தெரியப் படுத்தினாள். சக்கரவர்த்தியும் அந்த உடனே நம்பி அதற்குப் பழி வாங்குவதாகச்சொன்னார். "கோட்செவிக்குறளை காற்றுடன் நெருப்பு" என்ற மூதாட்டியின் மொழி பொய்க்குமா? முதலில் சொன்ன விஷயம் காதிலேறுமேல் அதற்குச் சார்பாக மற்றொன்றை மெதுவாய் நுழைத்தான். சக்கரவர்த்தியின் இரண்டாவது குமாரனைப் பட்டத்துக்குக்கொண்டுவர மொகபத்கான் யத்தனம்பண்ணுவதாகவும் ஜகத்ஜோதிக்குத் தெரிவித்தான். உடனே இது சக்கரவர்த்தியின் காதுக்கு எட்டிற்று. அவன் நடுநடுங்கித் தன் தளகர்த்தனிடம் வைத்திருந்த நம்பிக்கையை முற்றிலும் மாற்றிவிட்டனன் தனக்குண்டான நடுக்கத்தால் மொகபட்கான் செய்த பேருபகாரத்தையும் மறந்து அவனிடம் வெறுப்புற்றான். கோட்சொல்லிகளுக்குத் தாராளமாய்த்தன் செவிசாய்த்தான். தன் தளகர்த்தனை உடனே தன் சமுகத்துக்கு வரும்படி கட்டளையிட்டான். அப்பொழுது அவன் வங்காளத்தில் இருந்தான். வந்த உத்தரவுக்கு உடனே கீழ்ப்படியவில்லை. ஆகையால் பின்னும் கண்டிப்பான மறு உத்தரவு அனுப்பினான். மொகபத்கானும் இதென்ன விபரீதமாயிருக்கிறது. நான் ஒரு பாவத்தையும் அறியேனே. என்னிடம் சக்கரவர்த்தி அதிருப்தி அடையவேண்டிய காரணமென்ன?

ஏதோ மோசம் நடந்துவருகிறதுபோல் காண்கிறது எப்படியிருந்தாலென்ன? "மடியில் கனமிருந்தாலன்றோ வழியில் பயம்" யாது அபாயமிருப்பினும் சக்கரவர்த்தி சமுகம் அடைதலே தக்க சூழ்ச்சி யென்று மனத்தைத் திடம்பண்ணிக்கொண்டான். சத்துருக்களினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய முன்ஜாக்கிரதை அனைத்தும் செய்துகொண்டான். தான் செய்த நன்மைகளை

ல்லாம் விழலுக்கிறைத்ததாகப் போனதைப்பற்றி அவன் மனம் மிகவும் ஏக்கங்கொண்டது. தீராக்கோபமும் உண்டாயிற்று. இருந்தாலும் மனோதிடனுள்ளவனாகையால் தான் முன் கவர்னராயிருந்து வாழ்ந்த இடத்திற்போய் வாழ எண்ணங்கொண்டு அதற்குச் சென்றான். இவனைப்பிடித்த சனியன் அங்கும் தொடர்ந்துவிட்டான். ஜகத்ஜோதி உடனே ஒருவனை நியமனஞ்செய்து மொகபட்கானிடமிருந்து கோட்டையைப் பெற்றுக்கொள்ளும்படி உத்தரவு செய்தனுப்பினாள். அரண்மனையிலிருந்த நண்பர் மூலமாக இச்செய்தியை முன்னமே கேட்டிருந்தபடி சகலமும் உண்மையாயிற்று. சத்துருக்களின் சதியோசனையால் உயிருக்கே ஹானியுண்டாகும்போல் தோற்றிற்று. இவ்வபாயங்களின் ஸ்திதியை நன்குணராமல் சக்கரவர்த்தி சமுகம் செல்ல அவன் மனம் துணியவில்லை. ஆகையால் உடனே அவன் சக்கரவர்த்திக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் ஒரு தீங்கும் இழைக்காத தன்னிடம் அத்துணை வர்மம்பாராட்ட யாதுகாரணம் என்று தனக்குப்புலப்படவில்லையென்றும் சக்கரவர்த்தியினிடத்தில் தனக்குப்பூரண விசுவாசமிருக்கிறதென்றும் ஆனால் சதியோசனைக்காரரிடம் சிறிதும் நம்பிக்கைவைக்கத் தன்மனம் துணியவில்லையென்றும் விளக்கிக்காட்டியிருந்தான். சிறிதும் காலங்கடத்தாமல் உடனே வந்து சேரவேண்டியது என்ற ஹுஜூர் உத்தரவு கிடைத்தது. போகாமல் நின்றால் கலகம்பண்ணினதாகும். ஆகையால் அவன் முன்னிலும் வணக்கமாய் சக்கரவர்த்திக்கு மற்றொரு கடிதம் வரைந்தான். அதில் அவன் விக்ஞாபனம் செய்ததாவது “பூபதே! அடியேனுடைய உயிரைக்கொடுத்தும் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாய்ச்சண்டைசெய்யச் சித்தனாயிருக்கிறேன். ஆனால் அவ்வுயிரைத் தங்கள் நண்பர்களின் சதியோசனைக்குட்படுத்தி மாய்த்துக்கொள்ள மனந்துணியேன். அடியேனுக்கு அபயம் அளித்தால் தங்கள் திவ்வியசமுகத்தில் சகலத்தையும் நன்கு விளக்குவேன்” என்பதே.

இக்கடிதத்தைச் சக்கரவர்த்தி தான் படித்துப்பார்த்துவிட்டு ஜகத்ஜோதிகையில் கொடுத்தான். அவளோ அவன்பேரில் எவ்வளவு கோபமூட்டவேண்டியதோ அவ்வளவையும் செய்துமுடித்தனள்.

சக்கரவர்த்திக்குக் கடுங்கோபமூண்டு உடனே அவனைத் தன் சமுகம் கொண்டுவரும்படி ஓர் ஆளை அனுப்பினான். மொகபட்கானும் இனித்தாமதிப்பது மரியாதையில்லையென்று கீழ்ப்படியநினைந்தான். ஆனால் தன்னிடம் நெடுநாளாக விசுவாசத்தோடு சேவகம்செய்துவந்த ஐயாயிரம் ரஜபுத்திர வீரர்களுடன் புறப்படத்தீர்மானித்தான். இச்சேனையுடன் சக்கரவர்த்தி அச்சமயம் முகாம் செய்திருந்த லாகூர் போய்ச்சேர்ந்தான்.

ஜகத்ஜோதி இச்செய்திகேட்டவுடனே கனதிகில் அடைந்தாள். இச்சேனையைக் கண்டவுடன் சக்கரவர்த்தி நடுநடுங்கி ஒருகால் சமாதானத்துக்குட்பட்டாலும் படுவார். அல்லது சக்கரவர்த்தியின் அரசாக்ஷிக்கே அநர்த்தம் விளைந்தாலும் விளையும் என்று ஏக்கங்கொண்டாள். ஆகையால் அவனைச் சமீபத்தில்வர இடங்கொடுக்கக்கூடாதென்றாள். அச்சமயம் சக்கரவர்த்தியின் பரிவாரங்கள் லாகூரிலிருந்து காபூலுக்குப் போய்க்கொண்டிருந்தன. மொகபட்கான் சக்கரவர்த்தியின் இருப்பிடத்துக்குச் சமீபித்துவரவே ஒரு வேவுகாரன் ஓடிவந்து வங்காளத்து வரி வசூல் தொகைக்கும் காசி யுத்தத்தில் கொள்ளையிட்ட தொகைக்கும் வகைசொன்னாலொழிய உள்ளே புகக்கூடாதென்று உத்தரவு ஆயிருக்கிறது என்றான். இவ்வாறு கேட்பதைச் செவியேற்று உடனே இவ்வவமான சங்கதியைச் சக்கரவர்த்திக்குத் தெரிவிக்கும் வண்ணம் தன் மருமகனை அனுப்பினான். அம்மருமகன் சக்கரவர்த்தி சமுகம் செல்லவே அவன் உடுப்புக்களையெல்லாம் கழற்றி அவனையும் அடித்துக் கிழிந்த சட்டை ஒன்றை அவனுக்கு மாட்டி அவனை வாலுந் தோலுமாயிருந்த ஒரு முட்டிக்கால் தட்டுங் குதிரைமீது ஏற்றி அதன்வால் புறமாய் அவன் பார்த்திருக்கும் வண்ணம் அவனை உட்காரவைத்துச் சேனைகளெல்லாம் கொல்லென்று ஆர்ப்பரித்துக் கைகொட்டிச் சிரிக்க மாமனிடம் திருப்பி யனுப்பினார்கள். இவ்வவமானத்தை எவர்தான் சகிப்பார்கள். இவ்வித வேடிக்கைகள் இராஜ கிருகங்களில் அடிக்கடி நடப்பது வழக்கம். சில வருஷங்களுக்கு முன் ஒரு சிற்றரசர் ஒரு நாய்க்குக் காதுகுத்திக் கடுக்கன் முருகு முதலியவை இட்டு நெற்றியில் பழுக்கநாமமும் போட்டு மகமல் திண்டு மெத்தை முதலியவை இட்ட பல்லக்கில்

அந்நாயை உட்காரவைத்து பல்லக்குப்போகிகளை உரக்கச்சத்தமிட்டுக்கொண்டு தெருவழியே போகச்செய்து வழியில் போகிறவர்கள் யார் என்று விசாரிக்கும்பொழுது நாயக்கர் போகிறார் என்று பல்லக்கைத்திறந்து காட்டச்செய்து தன் சத்துருவை அவமானப்படுத்தினராம்.

மொகபட்கான் இதைச் சகியாதவனாய் சக்கரவர்த்தியின் புத்திக்குறைவைக்கண்டு துக்கித்து சகலமும் ஜகத்ஜோதியின் ஏவலாலேயே நடப்பதாக நிச்சயித்து ஒரு தீர்க்காலோசனை பண்ணினான். இந்நிலைமையில் ஜகத்ஜோதியின் அதிகாரத்துக்குட்பட்டிருப்பது பிராணஹானியாய் முடியாவிடினும் சுயாதீனத்துக்குப் பங்கம் நேரிடும். பிராணனைவிட்டாகிலும் மானத்தைக்காப்பாற்றவேண்டும். ஆகையால் திடீரென்று சக்கரவர்த்தியைத்தாக்கி அவனைச் சிறையாகக் கொண்டுபோவதே தக்க சூழ்ச்சியென்று மனவுறுதிபண்ணிக்கொண்டான். சக்கரவர்த்தியின் சேனை ஆற்றங்கரையில் பாளையம் இறங்கியிருந்தது அதற்குக்குறுக்கே ஒருமரப்பாலம் போடப்பட்டிருந்தது. இச்சம்பவம் நடந்த மறுநாட்காலையில் அச்சேனை பிரயாணம் புறப்பட்டது. சத்துருதேசத்தில் சஞ்சாரம்பண்ணுதபடியாலும் திடீரென்று எவரும் தாக்குவாரென்ற அபாயத்தைச் சிறிதும் எதிர்பாராதபடியாலும் கையிருப்பில் சேனை ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. பாளையம் இறங்கியிருந்த சேனை அதிகாலையில் புறப்பட்டுவிட்டது. சக்கரவர்த்திக்கு அவசரமில்லாததால் சௌகரியம்போல் போய்க்கொள்ளலாமென்று கூடாரத்திலேயே தங்கியிருந்தான். சேனை புறப்பட்டுப் பாலத்தைக்கடந்து செல்லவே மொகபட்கான் அதற்குத் தீயிட்டு சக்கரவர்த்தி ஓடமுடியாமற் செய்து உடனே அவன் கூடாரத்தை நோக்கிச்சென்றான். அவன்முகம் வெளுத்துப்போயிற்று. ஆனால் அவன் மனமோ உறுதியுள்ளதாகவே இருந்தது. அவன் எண்ணித்துணிந்த கருமத்தை முடிக்கவே நினைந்தான். ரஜபுத்திரவீரர் அவனைப்பின் தொடர்ந்து வந்தபடியால் ஒருவரும் அவனை எதிர்க்கமுடியவில்லை. கூடாரத்தைச் சூழ்ந்திருந்த காவலாளிகளையும் பிரபுக்களையும் உடனே நிராயுதபாணிகளாக்கினான்.

அச்சமயம் சக்கரவர்த்தி நீராடப்போயிருந்தான். மொகபத் அவ்விடத்துக்குச் சென்றான். அங்கு உருவினகத்தியும் கையுமாக

நிற்கும் காவலாளிகள் அவனைத் தடுக்க முயன்றார்கள். உடனே அவன் உறைவாளைக் கையில் எடுத்துப் பின்வருகிறவர்களை அதனால் அவர்களுக்குக் காட்டவே காவலாளிகள் தடுப்பதை நிறுத்தினார்கள். அவ்வீரன் கூடாரத்துள் சென்றான். அங்குக் கூடியிருக்கும் பிரபுக்கள் அவனைத் தாக்குவது முட்டாள்தனமென்று நினைந்து ஆயுதங்களைத் துறந்து நடக்கும் காட்சிகளைக் கண்ணுற்று நின்றார்கள். மொகபட்கான் அவர்களை வெறிக்கப்பார்த்து ஒரு சொல்லேனும் புகலாமல் சென்றான். அவன் பார்த்த பார்வை முதல் நாள் நடந்த செய்கையை அவர்களுக்கு ஞாபகமூட்டிற்று.

நடந்திருக்கிற சங்கதிகளையெல்லாம் சேடிப்பெண்கள் உட்கூடாரத்திலிருக்கும் சக்கரவர்த்திக்குத் தெரியப்படுத்தினார்கள். அவன் உடனே கத்தியைக்கையில் எடுத்து வெளியேவந்தான், தான் நிற்கப்பட்ட நிலையை நன்கு உணர்ந்து சும்மா இருந்து விட்டான். தன் காவலாளிகளும் பிரபுக்களும் நிராயுதபாணியாய் நிற்பதையும் மொகபட்கானைப் பின்தொடர்ந்து ரஜபுத்திரவீரர் வருவதையும் அவன் காலால் இட்டவேலையை அவர்கள் தலையால் செய்து முடிக்கத் தயாராயிருப்பதையும் கண்ணுற்று அவனிடம் அணுகிச்சென்றான். அச்சமயம் சக்கரவர்த்தியின் மனச்சாக்ஷி முந்தின நாள் தானிழைத்த தீங்கை நினைந்து அவன் மனத்தைச் சுட்டது. அவனிடம் சென்றவுடன் "மொகபட்கான்! இஃதென்ன விபரீதம்," என வினவினான். மொகபத்கானும் தரையைத்தொட்டு சலாமிட்டுச்சொன்னதாவது :—

"என் சத்துருவின் சதியோசனைக்கஞ்சி என் சக்கரவர்த்தியின் அபயத்தை நாடுகிறேன்" என்றான்.

"அபயம் அளித்தோம். பின் நிற்பவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்" என்றான் சக்கரவர்த்தியும்.

"அடியேனுக்கும் அடியேன் குடும்பத்தாருக்கும் அபயம் அளிக்கும்படி கேட்கவந்திருக்கிறார்கள். அதனைப்பெறாமல் அவர்கள் பின்வாங்கார்கள்". என்றான் மொகபத்கானும்.

"உன் கருத்தையறிந்தோம். உன் நிபந்தனைகளைக்கூறு. அவை அளிக்கப்படும், மொகபத்! நீ நினைப்பது அநீதி. நாம் ஒருகாலும் உன் உயிருக்கு ஹானி நினைக்கவில்லையே. உன் உதவியை யாம் என்றும் மறவோம். நம் ஆக்ஞைக்கு நீ உடனே கீழ்ப்படிந்து நடக்காதகாரணத்தால் உன்மேல் சிறிது மன்வருத்தப்பட்டோம். நீ அவசியம்பற்றிச் செய்த உன் பிழைபொறுத்தருள்வோம்." என்றான். மொகபத்தோ வாய்திறக்கவில்லை. உடனே ஒரு குதிரையைக்கொணரச்செய்து அதன் மேலேறும் வண்ணம் சக்கரவர்த்தியை வேண்டினான். ரஜபுத்திரவீரர் புடைசூழ இருவரும் முன்னோக்கிச்சென்றனர். கூடாரம்விட்டு வெளியேவந்தவுடனே சக்கரவர்த்தியை ஒரு யானைமீது ஏறும் வண்ணம் வேண்டிக்கொண்டான். சக்கரவர்த்தி இவ்வாறு செல்வதால் ஏதாவது ஒரு குழப்பத்துக்கு இடமுண்டாகலாமோ என்று நினைத்து இவ்வாறு வேண்டினன். சக்கரவர்த்தியும் அவன் இஷ்டப்படியே செய்தனன், ஏனெனில் எதிர்ப்பதிற் பயனில்லையென்றறிவான். யானைமீதேறியதும் மூன்று ரஜபுத்திரவீரர் அவனுக்குக் காவலாக உட்கார்ந்தார்கள். சக்கரவர்த்தி இவ்வாறு சிறைபிடப்பட்டதைக் கண்ணுற்ற சில பிரபுக்கள் எதிர்க்க ஆரம்பித்தார்கள். பின்னர் வரும்வீரர்களால் உடனே தடுக்கப்பட்டனர். வேறு ஒருவரும் எதிர்க்கத்துணியவில்லை. சக்கரவர்த்தி மொகபத்கானது கூடாரத்துக்குக் கொண்டுபோகப்பட்டான். அவ்விதம் வந்தவுடன் சக்கரவர்த்தியின் ஆக்ஞைக்காவது ஜீவனுக்காவது பங்கம்செய்யவேண்டுமென்பது தன் கருத்து அன்றென்றும் ஆனல் தற்காலத்துக்காகவே தான் செய்யத்துணிந்ததாகவும் சொன்னான்.

(தொடரும்.)

எஸ். சாமிநாதையர்.

சிவமயம்.

நிதரிசனம்.

நிதரிசனபலத்தால், கல்வி, அறிவு, ஒழுக்கமுடையாரன்றி, மாபாதகமே திரண்டோருருவாய் வந்தாரும் பயனடைதல் சரதம்: எந்த விஷயத்திலும் அநுபவசித்தி பெறுதல் வசனத்தினாலே மட்டு மல்ல, யூகம் உள்ளக்குளிர்ச்சியாகிய அன்புவழியே சென்று அவ்வவ் விஷயங்களுக்கேற்பட்ட விதிகளையனுசரித்து வேலை செய்யுமானால் நிதரிசனமாகக் கிடைக்கப்பெறும். வாக்குமனாதீத பரவஸ்துவை வசனமட்டிலே தொடர்ந்துபற்ற நினைத்தல், ஆற்றுக்கு வாய்கட்டி அம்பரத்துக்கு ஏணிவைத்தல் போலும், அம்முயற்சியுடையார் பலனடையாத மந்தமதிகளேயாவர். அவர்களைப் பின்றொடரும் பேதையரும், குருடர் கைக்கோல்பற்றிப் பின்னே செல்லும் குரு டரே. அகத்து ஞானமில்லாது புறத்துவேட மாத்திரையானே, உண்மை ஞானியர்போல்நடித்து ஆங்காங்கு அலைந்துதிரியுந்தவப்பக டிகள், மற்றையோர் ஆயிரங்கண்களென்று அதிசயித்து நோக்கத் தனக்குமட்டும் யோனியாய்த் தோன்ற இலச்சையுற்று நிற்கும் இந்திரனை போல்வர், தமது வாசாஞானமும் வேடமும் உண்மை ஞானியர்முன் இழிவாய்த்தோன்றுமே என்ற வெட்கமும் பயமுமே வலால். வேடத்தையும் வித்தியா சாமர்த்தியத்தையும் நம்பியே மற ந்துபோகும் ஏழைமாந்தரும் அநேகருளர். அந்தோ! அவர்களும், அந்த வேடதாரிகளு மெய்ப்பயன் பெறுவரோ! அறிகிலம். இதுநிற்க.

நம்முடைய தேசத்துக்குப் பாரதம் என்றுபெயர். அதை அந் நியநாட்டார் இந்தியாவென்றழைப்பர். பாரதம் என்பதிலும் பலவி தமுண்டு, வேதாகமங்கள் விதித்தகன்மங்களை நெறிபிழாதுஞற் றும், பிராமணஸமுகத்துக்கு, "பிராமணபாரதம்" எனவும் வீரசூர தைரிய பராக்கிரமங்களோடு கூடித்தண்ணளியால் அரசுரிமை பற்றி வாழும் க்ஷத்திரியசங்கத்துக்கு "க்ஷத்திரியபாரதம்" எனவும். பண் டமாற்றலைக் கிரமமாகப் பரோபகாரநிமித்தஞ் செய்யும் வணிககுழா

த்துக்கு "வணிஜபாரதம்" என்வும், ஏவற்றொழிலைக் கைக்கொண்ட சூத்திரக் கூட்டத்துக்கு "தாஸபாரதம்" எனவும் கூறும். அன்ன வண்ணமே மலவிருள்நீக்கத்தில், திருவருட்பிரகாச நெறிச்சென்று சச்சிதாநந்த பராநுபூதிச் செல்வத்திற்றிளைக்கும் மஹா ஞானமோன முக்தசிகாமணிகளின் கோஷ்டிக்குப் "பவித்திரபாரதம்" எனப்பகர்வர். அதைச் "சன்மார்க்கம்" என்னலுமாம். ஆனதுபற்றியே, ஏனை நாடுகளினும் கல்வி, செல்வம், முதலியவற்றான் மேம்பாடெய்தியது இவ்விந்தியாவாதலால், அந்நாட்டவர் அநேகர் தொன்றுதொட்டு விரும்பிவந்தடைந்து கொண்டேயிருக்கின்றனர். நிற்க.

உரையானன்றித் திருஷ்டாந்த பூர்வகமாகப் பரமசாம்பிராச்சியம் எய்தியதற்கு இரண்டுண்மைக் கதைகளை யீண்டுதஹரிப்பாம்.

I.

சில வருடங்களுக்குமுன் ஒருசிறிய இந்துப்பையனிருந்தான் அவன் சின்னஞ்சிறு வயதிலேயே ஆசாரபுனிதம், உத்தமகுணம், பத்தி, ஞானப்பற்று முதலியன நனிவாய்ப்பப் பெற்றிருந்ததனால், ஏகாந்தஸ்தானத்தை நாடிப்போய் இறையருளைச் சிந்திப்பதுமன்றித் தன்விளையாட்டுச் சிறுதோழர்களையுந் தன்மாதிரியனுஷ்டிக்க வற்புறுத்திக்கேட்டுவருவதுண்டு. அவன் "சீதாராம" மூர்த்தியினிடத்துப்பேரன்புடையவனா யிருந்தான். அந்த மூர்த்தியின் குணாதிசய வைபவங்களைக் குறிக்குங்கதைகளே அவனுக்கு உபதேசவாக்கியம் போலிருந்தன.

இவ்வாறாக வாண்டுகள் பல கழிந்தன. பருவமுமுதிர்ந்தது. அவன் பிரதமத்திற் சாமான்ய வித்தியாசாலைகளிற் கற்பிக்கப்பட்டுப் பின்னர் அவன் பிறந்த வங்கநகரத்தேயுள்ள ஸர்வகலாசாலை யுயர்தரப் பரீக்ஷைகளிலும் பிரசித்தி பெற்றுத் தேறியது மல்லாமல், தற்கால நவீன நாகரீக ஜடதத்துவ சாஸ்திரப் பயிற்சிகளிலும் மேம்பாடுடையவனா யிருந்தான். அவன் அநநாள் வரை கற்றுத்தேறிய அப்பூத தத்துவ சாஸ்திரங்களினால் ஆன்மார்த்தபலன் சிறிதும் அவனுக்குக் கிட்டவேயில்லை. வைதிக சாஸ்திர நிபுணர்களிடத்துக் கேட்டும் அவன் ஐயமகன்ற தாயில்லை. ஆயினும் முத்தியின் விருப்பமோ அவனை யெந்நேரமும் இடைவிடாது பற்றியீர்த்தது. எதிர்ப

பட்டோ ரெவரானுலும் அதைப்பற்றி யுசாவுவதாயினன். சந்தேகம் நிவர்த்தியானபாடில்லை. ஆனதுபற்றி உட்சமய புறச்சமய மதாசாரியர்களிடத்தும், கிறிஸ்தவ குருமாரிடத்தும், மகம்திய ஆலிம்களிடத்தும், தெரிவித்து ஒரே விதமான கேள்விகளைக் கேட்கவாரம்பித்தான். அவை 1. "நீங்கள் பிரசங்கித்தும் உபதேசித்தும் வரும் விஷயங்கள் உண்மையென் றுங்களுக்கு எப்படித் தெரியும்"? 2. "அவைகளை நீங்கள் ஐயந்திரிபறவறிந்து அனுபவித்ததுண்டா"? என்பவைகளே. அவைகளுக் கொருவராவது சரியான விடைபகராது, வேதங்களிற் கூறியிருக்கிற தென்றும், பாஷியங்களிற் பகர்ந்தன ரென்றும், பைபிலில் படித்திருக்கிறே மென்றும், கொருனில் எழுதியிருக்கிற தென்றும், மனம் போனபடி யுளறுவதாயினர். இதை முன்னிட்டு நெடுந்தூரம் திவ்ய ஸ்தல யாத்திரை செய்தும் அவன் மனம் தெளிவடையவில்லை. எப்படியாயினும் உண்மையறிய வுறுதி கொண்டு தன்னைத்தான் உள்ளபடி யறிந்து ஸ்வாநுபவச் செல்வத்தை எதார்த்தமாக அநுபவிக்கும் மெய்ஞ்ஞானதேசிகனைத் தேடிக்கொண்டே பல்லிடந் தோறும் பரிந்து சென்றனன். இவ்விதமாக வேட்ட அதிமோகியாய் மனமெலிந்து செல்கையில் பாலசமான பரஞானச் செல்வ மகானெருவனைக் கண்ணுறுமாறு திருவருள் கூட்டி வைத்தது. அம்மஹான் விரும்பிய வண்ணம் உரையாலன்றி உதாரண மாத்திரை யாலேயே யுணர்த்த வல்ல உத்தமகுரு. அப்பையன் அம்மகானிடத்தும் "சுவாமி! தாங்கள் ப்ரம்பொருளைக்கண்டதுண்டா? ஆன்ம தரிசனம் பண்ணியிருக்கின்றீர்களா"? என்பன வாதியாய் பல கேள்விகளைக் கேட்டலும் முனிபுங்கவரோ சந்தோஷ சித்தராய், ஆச்சரிய மடைந்து புன்முறுவலெய்தி "ஆம் உண்டு" என்று பிரசன்ன வதனத்தோடு தெள்ளிதிற் றெளிய விடை பகர்ந்தனர். மறுபடியும் அச்சிறுவன் அவைகளை யெனக்குக் காட்ட முடியுமா வென்று அப்பெரியவரைக் கேட்டமாத்திரத்தில், சிறிதுந் தாழ்க்காது "கூடும்" என்று தாஷ்டீகமாகக் கூறினர். பின்னர் அச்சிறுவன் அம்மகானுடைய திவ்ய திருவடிகளுக்கருகே யுட்கார்ந்திருந்தனன். ஆயினும் அப்பையன் அம்முனிவர் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவில்லை. மேன்மேலும் பலபல கேள்விகளைக் கேட்டுச் சொல்லைப்போலச் சுதாநுபவமு முண்டோ வென்று வேறு

வேறு நியாயங் கொண்டு தர்க்கித்துச் சில வருஷங்கள் வரை காத்திருந்தனன். கடைசியாக அவன் மனதிற் படிந்திருந்த சந்தேகங்கங்கள் சிறிது சிறிதாக நீங்கி அம்மகானிடத்துக் கொஞ்சம் கொஞ்சம் நம்பிக்கை யேற்பட்டது. அதனால் நிதரிசனமாக எதிரே தோற்றும் ஸாக்ஷி சொரூபத்தின் அற்புத மஹாசக்தி அவன் மாட்டு மலிந்து கிடந்த சகல சந்தேகங்களையும் நீக்கினமையால் அவன் இருபது வயதுக்குள்ளாக ஒட்டுடன் பற்றின்றி யுலகைத் துறந்தான். அம்மட்டோ! உலகமெலாம் நன்குமதித்துத் தொழுதேத்துமாறு சர்வமத சன்மார்க்க ஞானசாரியனாகி மற்ற இந்துக்களைப் போலல்லாமல், அநேகமாய் உலக முழுவதும் சென்று தான் தன்னுடைய சற்குருவினிடமாகப் பெற்ற அத்யற்புத பரமரஹசியங்களை யெல்லாரு மறிந்துய்யும்படி கருணைப் பிரசங்க மாரி பொழிந்தனன். அதனால், அந்நிய நாடுகளிலுள்ளவர்களி லநேகர் நாஸ்திக புத்தியும், நவீன நாகரீகச் செருக்கு மகன்று உண்மை ஞானப்பிரகாசம் ஓங்கிச்சொலிக்க விளங்கு கின்றனர். நிதரிசனமாகக் காட்டி யாட்கொண்ட ஞானகோமானும், குறிப்பாலுணர்ந்து கொண்ட குமரனுமே பிறவிப் பயனை யுண்மையா யடைந் துலகிற் குண்மை யுபகாரிகளானவர்கள். அவர்களின் றிவ்ய திருவடிகளே நமக்கென்றுஞ் சரண்.

II

வங்காளநாட்டில் வைஷ்ணவ மஹாபக்த குருவென்று வழங்கப்படுகிற ஸ்ரீசைதன்ய கோரங்கசுவாமியும், இந்து தர்க்கமாகிய நியாய சாஸ்திரமும் பிறந்த விடமாகிய நாடியா என்னும் ஓர் ஊர் உண்டு. அம்மஹா குருசைதன்யர் காலஞ்சென்ற பத்து வருஷங்களுக்குப் பின்பு வைசிய குலத்துதித்த "லோசன தாஸன்" என்னும் பெரிய பக்தன் ஒருவனிருந்தான். அவனுக்கு மஹா பதிவிரதா சிரோமணியாகிய மனைவியைத் தவிர வேறு யாரும் இந்நிலவுலகத்திற் சொந்தமில்லை. அவன் திருவருளை முன்னிட்டு முத்துச்சிப்பி வியாபாரஞ்செய்து அதனால் விசேட ஆதாயம்பெற்று வந்தனன். அவன் தன்னுடைய வருவாயை யிரண்டாகப் பிரித்து ஒருபாதியைத் தானதர்மங்களிலும் சற்கருமங்களிலும் செலவழித்து மற்றோர்பாதியில் தன்னுடைய குடும்பார்த்த செலவுபோக மீதியைக் கையிருப்பிற் பிந்தியகால வுபயோ

கத்தின் பொருட்டு வைத்து வருவானாயினன். அவனிடத்தில் ரொக்கப்பணம் எப்போதும் கையிருப்பிலுண்டென்பது யாருக்குந்தெரியாததில்லை.

லோசனன் இவ்வாறு பாங்கு பெறப் பரிசுத்த ஜீவனஞ் செய்து வருநாளில்,நாடியாவில் விசேஷ கோரமான திருடர் பயம் ஏற்பட்டது. கள்வர்கள் மகா சாமர்த்தியமாகத் தங்கள் வேலைகளைச் செய்து வந்ததினால் சமஸ்த ஜனங்களுக்கும் நஷ்டம் நேரிட்டது மன்றி மனதிற்றிகிலு முண்டாய்க் கொண்டே யிருந்தது. அநேகமாயிரம் கௌரவமுள்ள பெரிய குடும்பங்கள் பாழ்பட்டன. தன்னுடைய சொத்தும் கொள்ளை போகாதிருப்பதற்காக வீட்டினுட் புற மூலையொன்றில், சிறு துவாரங்கள் சுற்றிலுமுள்ள மண் பானை யொன்றைக் கவிழ்த்தி, அதற்குள் மினுக்கு மினுக்கு என்னும்படி சிறிய கைவிளக்கொன்றை வைத்துக்கொண்டு பக்கத்தில் மனைவியுந் தானுமாய் முறைபோட்டு இராக்காலங்களில் விழித்திருந்து பந்தோபஸ்து செய்து வருவது ஸஹஜம். நாய் குலைப்பினும், மரங்களின் இலைகள் அசைந்த சப்தம் கேட்பினும்,குப்பை கூளங்கள் சர சர வெனக் காற்றிலோடும் அரவந்தட்டினும் அடிவயற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு திடுக்கிட்டெழுந்து பார்ப்பதுண்டு. ஒரு நாள் நள்ளிருளில் தூங்கிக்கொண்டிருந்த தன் மனைவியை யெழுப்பி உட்காரவைத்துவிட்டுத் தான் படுத்துறங்கினன். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அடுத்த சுவர் பக்கத்தில்,சரக்குச் சரக்கு என்ற சப்தங்கேட்டது. அதை யின்னதென்றறியச் சக்தியற்ற மனைவி யெழுப்பினள்.

புருஷனெழுந்து சிறிது கவனித்துப்பார்த்துச் சுவரில் கன்னம் வைப்பதாகத் தெரிந்து கொண்டனன். களங்கமற்ற பத்திப் பேரன்புடைய லோசன தாசன்,உண்மை யறிந்தவனாய்த் தைரியத்தோடும் ஊக்கத்தோடும் சோரனைப் பிடிப்பதற்காகச் சூழ்ச்சிசெய்துகொண்டு காத்திருந்தனன். கதவிடுக்கலில் விளக்கை மறைத்து வைத்துக் கொண்டிருக்கும்படிக்கும்,திருடன் உள்ளே வந்தவுடன் அவன் மறுபடியும்வெளியே யோடிப்போகாதிருக்கும்வண்ணம் தீபத்தைப்பிரகாசமாய் எரியச்செய்யும்படிக்கும்,மனைவிக்குச் சொல்லித் திட்டம்பண்ணி வைத்தனன். திருடன் வீட்டிற்குள் வந்தவுடனே சாதுரியத்

தோடுஞ் சாகசத்தோடும் பிடிக்க ஆரம்பித்தார்கள். வீடுமுழுவதும் ஒரே வெளிச்சமாய்த் தெரியும்படி தீபம் ஏற்றவும், திருடன் பேச்சு மூச்சில்லாமல்,பட்ட மரம் போலவும் மந்திரத்திற் கட்டுண்ட சர்ப்பம் போலவும் அசையாது நின்றனன். ஆனால் கள்வனைப் பிடிப்பதற்கு ப்பதிலாக ஆச்சரியம்,நடுக்கம், வெட்கம், மரியாதை, அன்பு முதலிய வைகளால் வசப்படுத்தப் பட்டனன். சிறிது நேரம் திருடன் முக த்தைப் பார்த்துக்கொண்டே யிருந்து லோசனன் மிகவும் ஆச்சரிய மடைந்து“பூச்சிய பாதரே” இஃதென்ன? என்னினைந்தீரோ? அந்தோ! அந்தோ!! வெட்கம். வெட்கம், உயர்ந்த விப்பிர குடும்பத்தில் ஞான பூரணமான ஆசாரிய புத்திரனாயிருந்தும்,மகா இழிவான இந்தத்திரு ட்டுத் தொழிலை யார் செய்யச்சொன்னது? நான் தாழ்ந்த குலத்துப் பிறந்திருப்பதினால், உம்முடைய பிதா அடியேனுடைய வீட்டுக் கெ ழுந்தருளிப் புனிதமாக்கி வந்தார். அவருடைய புத்திரனாகிய நீர் இந்த அவமானகரமான வேடந்தரித்து இரவில் இங்கு விஜயம் செய் தீர். ஐயோ! பரிதாபம்! பரிதாபம்! அடியேனே உம்முடைய திருவ டித் தாஸன். என்னுடைமை முழுவதும் உம்முடையதே. கொஞ்சம் உத்தரவு கொடுத்தால்,முழுவதும் உம் வசமாகும்படியான சொத்தை ப்பெறுவதற்கு நீர் இவ்வளவு கஷ்டப்பட்டு மலைப்பானேன்? உம்மு டைய உடம்பெல்லாந் தூசிபடிந்தும்,முகம் வெளுத்தும், அரையிற் க ந்தைத்துணியுடையுமாக விளங்குகின்றீரே. ஆ! தெய்வமே! இந்த நி லைமைக்கு வந்த காரணம் என்ன? இருந்த போதிலும் அடியேனுடை ய சிறு குடில் சுவாமிகளின் திருவடி மிதிக்கப் பெற்றதனால் நான் மகா தன்யனானேன். கிருதார்த்தனானேன். ஆகையால் தய்வு செய் து திருவடிகளைச் சுத்தம் பண்ணிக் கொள்ளும். நீர் மிகுந்த பசியா யிருப்பதினால், அடியேனுடைய வீட்டிலுள்ள பால் பழம் முதலிய வைகளை யுட்கொண்டு சிறிது களைப்பாறும் என்று சொன்னான்.

ஒரு ஆசனம் போடும்படிக்கும் தண்ணீர் கொண்டு வரும்படிக் கும் மனைவியைப் பார்த்துச் சொன்னான். லோசன தாசனுடைய மனோபாவம் பூச்சிய பாதருக்குத் தெரியாதிருக்கவில்லை. லோசன தா ஸனுடைய கபடமற்ற உத்தமமான மகா நன்மையானது அவர் செ ல்வதற்கு மேல் நிலைக் கதவைத்திறக்க ஆரம்பித்தது. சிறிது நேர

ம் அவர் அவ்விட்டில், தான் நிதரிசன மாகக்கண்ட பெருமையையும்
அழகையும் கண்டு மயங்கினது மன்றி புனிதத்தையும் நன்மையையு
மே சுவாசிக்கும்படியான நிலையிலிருந்தார். அதனால் அவரைச் சூழ்
ந்திருந்த அசுத்த வெண்ணம், செய்கையனைத்தும் அகன்றோடத் த
லைப்பட்டன. அவருடைய இரு கண்களிலும் நீர் ததும்ப நெஞ்சம்
தீயிடைப்பட்ட மெழுகென உருக ஆரம்பித்தது. அன்பும் அருளும்
அவருடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. லோசனன் மனைவி
எத்தாவது கொஞ்சம் சாப்பிடும்படி அவரைப் பிரார்த்தித்தாள். அஃ
தவருக் கெப்படிக்கூடும்? வேண்டா மென்றனர். ஆனால் லோசன
தாஸனை அவர் சாப்பிடாத பக்ஷத்தில், பக்கத்து வீட்டுக்காரர்களைக்
கூவித்திருட்டை வெளிப்படுத்தி விடுவேனென்று பயமுறுத்தினன்.
பின்னர் பூச்சியபாதர் சிறிது புசிக்கத் தொடங்கினர். கொஞ்ச நேர
ங்கழித்துச் சுவரிலுள்ள துவாரத்தை (கன்ன வாசல்) அடைத்து வி
ட்வேண்டும்; தவறினால் காலையில் குற்றமேற்படு மென்று லோசனன்
சொன்னான். மனைவி தண்ணீர் கொண்டுவந்து ஊற்ற, லோசனன் சா
ந்து குழைத்துக் கொடுக்க, பூச்சியபாதர் கன்ன வாசலைக் கெட்டியாய
டைத்தனர். இவ்வேலையோ அதிசீக்கிரம் முடிந்தது.

பின்னர் பூச்சியபாதருடைய பாதாரவிந்தங்களில், பத்துத்தங்
க மொகராக்களையும் ஒரு நேர்த்தியான சால்வையையும் சமர்ப்பித்து
சுவாமிகள் கட்டளை யிட்ட வண்ணம் செய்ய எப்போதும் தான் சித்
தமாய்க் காத்துக் கொண்டிருப்பதினால், தயவு செய்து அங்கீகரிக்க
வேண்டு மென்றும், இனிமேல் எப்போதாவது இத்தகைய இழிவா
ன செய்கைகளைச் செய்யக் கூடாதென்றும் லோசனன் பிரார்த்தித்
தான். அந்த நிமிஷம் வரை பூச்சியபாதர் ஒரு வார்த்தையும் பேச
வில்லை. ஆனால் அவருடைய உள்ளக் கிளர்ச்சியை யடக்க முடியா
மல், தனக்கு யாதொன்றும் தேவையில்லை யென்றும், இனிமேல்
திருடுகிறதில்லை யென்றும், உன்னுடைய பரிபாக சித்தத்தினுண்டா
ன அற்புத நன்மையால் ஞானக்கண் பெற்று நித்தியா நித்திய வஸ்
து விவேக மாதிசற் சாதன வாயிலாக வுண்மையை நிதரிசனமாகக்
கண்ட எனக்கு இந்த அற்பமான உபயோகமற்ற பொருளை விரும்பு
ம் தேட்டமும் எற்படுமோ? நான் அவைகளை அபேக்ஷிப்பதில்லை.
நாளை இந்த நாட்டியாவிலாவது வங்காளத்திலாவது இரகுநாதனை

ஒருவரும் காணமுடியாது. நானோ நராதமன். எனக்குச் சற்சன சங்கமாவது சன்மார்க்க சம்பாஷணையாவது கிடையாதே. என்னுடைய பிதா பிரக்யாதி பெற்ற ஒரு ஆசாரியர். அவருக்குப் பிறந்த நான் என்ன தொழிலைச் செய்தேன்? கொலை, களவு, தூர்த்தம், நம்பிக்கைத்துரோகம், துஷ்ட சஹவாஸம், தீனர்களுக்கும் இடுக்கண் செய்தலாதியவே ஆபரணமாகப் பூண்டிருக்கிறேன், நானிதோ உன்னுடைய கிருபையால் தெளிவடைந்தேன், பாபங்கள் பறந்தன. உன்க்கு ஆசிர் வாதம் என்று சொல்லிக் கொண்டு லோசனதாசனைக் கட்டித்தழுவி வீட்டை விட்டு வெளியேறினர். இது நிற்க.

பூச்சியபாதரின் சரித்திரம் இங்கே சிறிது விசாரிக்கத் தக்கது. அவருக்கு ரகுநாத பட்டாசாரியர் என்பது அபிதானம். அக்காலத்தில் நையாயிக வித்துவான்களில் மிகப் பிரபலரான "தேவிசரண தர்க்காலங்காரர்" என்பவருடைய ஒரே பேறான புத்திரர். சிறு வயதில் இவர் படிப்பைக் கவனிக்கவில்லை. யௌவநபருவத்திலோ இந்திரிய வய மயங்கிப் பாவநெறியைக் கடைபிடித்து அநியாயமாகச் செய்யாத குற்றங்களோ மிகச் சொற்பம். பிதாவின் தேகவியோகத்துக்குச் சில வருஷங்களுக்குப் பின்னர் பிதிரார்ஜித தனமெல்லாம் வேடிக்கையிலும் விஷய சுகாநுபவத்திலும் வீணே செலவழிக்கப்பட்டுத் தற் காலக்ஷேபத்துக்குக் களவே தொழிலாயமர்ந்தது. நாடியா முழுவதும் இவர் பேர் சொன்ன மாத்திரத்தில்இவருடைய களவின் வன்மைக்கும் கோரச் செய்கைக்கும் நடுநடுக்கும்படியான அத்தனை சமர்த்தராய் விளங்கினர். இதுநிற்க.

(இன்னும் வரும்)

பு. நா. சொக்கலிங்கம்.

பத்திரிகை வரவு.

இந்தியா வென்ற புதிய தமிழ்ப பத்திரிகை:—இப்பெயர் புனைந்த ஒரு புதுத் தமிழ்ப் பத்திரிகை பிரதி புதன்கிழமை தோறும் சென்னையில் பிரம்ம வாதின் அச்சாபீஸில் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பத்திரிகை நமக்கு அனுப்பியதற்காக நாம் பத்திராதிபருக்குமிக்க வந்தனம் செலுத்துகின்றோம். இது பிரின்டிங்க் டெமியில் 16 பக்கங் கொண்டது. காகிதமும் அச்சும் கண்டோர் கண்களைப் பறிக்கத்தக்கனவாக இருக்கின்றன. விஷயமும் தெளிவாயும் அழகாயும் எழுதப்பட்டிருக்கின்றது. நடை வாசிப்பவருக்கு இன்பம் பயக்காமலிராது. நாட்டுவளப்பங்களை நன்குணர்ந்து எழுதி வருவதால் இப்பத்திரிகை சீக்கிரம் பரவி ஜனங்களுக்கு மிக்க நன்மை உண்டாக்குமென்பது திண்ணம். நாட்டின் சீர்திருத்தங்களுக்கு வேண்டிய அரிய விஷயங்கள் பல காணப்படுகின்றன. இம்மாதிரியாகவே ஊக்கத்தாழ்வின்றி இப்பத்திரிகை நடை பெறும்பக்ஷத்தில் கூடிய சீக்கிரம் வாரம் மும்முறை பிரசுரமாகும் பத்திரிகையாகிப் பின் தினசரிப்பத்திரிகையாகவும் வருமென்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. பொது ஜன அபிவிருத்தியைத் தேடும் பல கனதனவான்கள் இதனை ஆதரித்துக் கைதூக்கிவிடுவார்களாக. இப்பத்திரிகை நீடூழி வாழ்க.

பத்திராதிபர்.